Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி -19 | 06-10-2003 | திங்கட் கிழமை | ஓசை 230

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்.
கணனி முறை வீடியோ எடிசிங்.
பாடல் பதிவுகள்
அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi.

யாழ் சாலை, (சி-8628) கிளிநொச்சி.

# பன்னிரு வேங்கைகளின் எழுச்சிநாள் நிகழ்வாக மீள் புனரமைக்கப்பட்ட தீருவில் தூபி திறந்து வைப்பு

லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட12 வேங்கைகளின் நினைவு நாள் நேற்று தமிழீழப் பிரதேசம் எங்கும் எழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டது.

இப்பன்னிருவரினதும் ஞாபகார்த்த தூபி தீருவிலில் மீள் புனரமைப்புச் செய்யப்பட்டு நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

வல்வெட்டித்துறை தீருவிலில் அமைக்கப்பட்டிருந்த இந்தத்தூபி 1996ஆம் ஆண்டு குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டவேளை குண்டு வைத்து தகர்க்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களால் மீள் புனரமைப்பு செய்யப்பட்ட தூபியே நேற்று வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையில் உள்ள கடற்புலிகளின் அரசியல்துறைப் பணிமனைப் பொறுப்பாளர் செல்வி கல்யாணி தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

புனரமைக்கப்பட்ட தூபியை கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் நாடாவை வெட்டித் திறந்து வைக்க, பன்னிரு போராளிகளது தூபிகளிற்கும் அப்போராளிகளது பெற்றோர் மற்றும் உறவினர்கள் விளக்கேற்றி மலர் மாலை அணிவித்தனர். இதேவேளை விசேடமாக நிர்

(8ஆம் பக்கம் பார்க்க)

# மோதலும், வன்முறைகளும் தணிந்திருப்பினும் மக்கள் மத்தியில் பதற்றம் தணியவில்லை!

## யாழ். மடத்தடி நிலவரம் குறித்து கண்காணிப்புக்குழு

(யாழ்ப்பாணம்)

**படைத் தரப்புக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்ட மோதல் சம்பவங்களும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறைகளும் ஓரளவு தணிந்திருப்பினும் பொதுமக்களிடையே பதற்றமும் பரபரப்பும் தற்போதும் காணப்பட்டு வருவதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலக பிரதித் தலைவர் எஸ்தர் கிறிஸ்தோபர் தெரிவித்துள்ளார்.**

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகளை ஊடகவியலாளர்கள் சந்தித்துக் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், இச்சம்பவத்தால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டமையை இட்டு கண்காணிப்புக்குழு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்ததுடன் ஒன்றுபட்ட மக்களின் ஆதரவு சமாதானத்தை வென்றெடுக்கும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, புரிந்துணர்வு ஒப்பந்தம் இல்லாவிட்டால் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் சுட்டு வீழ்த்தியிருப்போம்என மடத்தடி காவலரண் இராணுவ அதிகாரிதெரிவித்துள்ளார். காவலரணை அகற்றுமாறு அப்பகுதி மக்கள் கோரிய போதே அவர் இவ்வாறுகூறினார்.

யாழ்ப்பாணத்தில் எவ்வாறான

(8ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுவின் விசேட குழு யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள பொதுமக்கள் - படைத்தரப்பு முறுகல் நிலையைக் கண்காணிப்பதற்கு நான்கு பேர் கொண்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் விசேட குழுவொன்று யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மடத்தடிச் சந்தியில் இராணுவ ட்ரக் மோதி இருவர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட முறுகல் நிலை தொடர்பாக யாழ்ப்பாண போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் கண்காணிப்புக் குழுவின் தலைமை

(8ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண் அகற்றும்வரை போராட்ட நடவடிக்கை தொடரும்

### குருநகர் வாழ் மக்கள்

குருநகர் மடம் சந்தியில் உள்ள காவலரணை முற்றாக அகற்றும் வரை எமது எதிர்ப்புப் போராட்ட நடவடிக்கை தொடரும் என குருநகர் வாழ் பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். மேற்படி காவலரணால் அடிக்கடி அப்பகுதியில் வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன் இனியும் ஏற்படும் அபாயம் இருப்பதால் அக்காவலரணை அகற்ற வேண்டிய தேவை உள்ளது எனத் தெரிவித்துள்ள மக்கள் அதனை இராணுவம் அகற்றாத பட்சத்தில் அகற்றுவதற்கான அழுத்தங்களை பல வழிகளில் மேற்கொள்ளப்போவதாக தெரிவித்துள்ளனர். (33)

## நெஞ்சம் நிறைந்த விழாவாக ஆசிரியர் நாளைக் கொண்டாடுவோம்

### கல்வி மேம்பாட்டுப் பேரவை வாழ்த்து

உலகத்தில் மக்களுக்குத் தொண்டு செய்பவர்களை நன்றியுடன் நினைவு கூருவதும் பாராட்டுவதும் மனித நேயப்பண்புகளில் ஒன்று என்பது மட்டுமன்றி எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியது மாகும். இந்தவகையில் ஆசிரியர் நாளை யொட்டி எமது தேசத்தின் ஆசிரியர்களை வாழ்த்துவதிலும், பாராட்டுவதிலும் கல்வி மேம்பாட்டுப் பேரவை பெருவகை அடைகின்றது.

இவ்வாறு உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, எமது ஆசிரியர்கள் கடந்தகாலங்களில் குறிப்பாக எமது பகுதிகளில் வன்கவர்ப் போர் நடந்த காலங்களில் ஆற்றியபணி போற்றத்தக்கது. ஆசிரியர் பற்றாகுறை, வளப பற்றாக்குறை, பொருண்மியத் தடை போன்ற பல சிக்கல்களை எதிர் கொண்ட போதும் தமது பணியை உயர்வாகக் கருதி அச்சத்தையும், துன்பங்களையும் எதிர்கொண்டு ஆற்றிய பணியை கல்வி மேம்பாட்டுப் பேரவை உளமாறப் பாராட்டுகிறது. குறிப்பாக எந்த வகையான கொடுப்பனவுகளைப் பெறாதும் தமது கடமையைச் செவ்வனே

(8ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை குறைப்பு

எரிபொருட்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளது. இலங்கை ரூபாவிற்கு எதிரான அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சி யடைந்ததை அடுத்தே இந்த விலைக் குறைப்பு ஏற்பட்டுள்ளதாக கனியவள திணைக்களத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தப்பட்ட சிறுமி மீது பாலியல் வல்லுறவு!

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நான்கு பேரினால் கடத்திச் செல்லப்பட்ட சிறுமி ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் ஒன்று மானிப்பாய் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

13 வயதுடைய சிறுமியே அவரது வீட்டில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ் நிகழ்வுக்கு மன்னாரில் தீவிர ஏற்பாடு

மன்னாரில் பொங்குதமிழ் சம்பந்தமாக பொங்குதமிழ் விழாக்குழுவினர் நேற்று பேசாலை, தலைமன்னார், தாழ்வுபாடு போன்ற இடங்களுக்குச் சென்று மக்களுக்கு பொங்குதமிழ் பற்றிய விளக்கங்களை கூறியுள்ளனர்.

இதே வேளை ஒன்பதாம் திகதி தொடக்கம் பதினைந்தாம் திகதி வரை பொங்குதமிழ் வாரமாக அனுஷ்டிக்கப்படுமெனவும், அந் நாட்களில் மன்னாரிலுள்ள சகல வீடுகளிலும் சிவப்பு மஞ்சள் கொடி பறக்கவேண்டுமெனவும் அவர்கள் மேலும் கேட்டுள்ளனர். (மி)

## பூரண அதிகாரம் கொண்ட சபையாக இ.நி. சபையை ஏற்க வழி செய்க

### தேசியத் தலைவருக்கு தென்மராட்சி வணிகர் மன்றங்கள் மனு

சிதைந்துபோன தமிழர் சமூகம் தழைக்க வேண்டுமெனில் இடைக்கால சபையை பூரண அதிகாரம் கொண்ட சபையாக ஏற்று தமிழர் சமூகம் தலை நிமிர வழிசமைப்பீர்கள் என திடசங்கற்பம் கொள்கின்றோம் என தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கு தென்மராட்சி வணிகர் மன்றங்களின் ஒன்றியம் அனுப்பியுள்ள மனுவில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதன் விபரம் வருமாறு, அடக்குமுறைக்கெதிராக திரண்டெழுந்த தமிழர் சமூகத்தின் தலைவராக நிமிர்ந்து நின்ற எமக்கென ஒரு படையை அமைத்து போராடி சிங்கள தேசத்துக்கு சரி நிகராக நிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு தலைமை தாங்கி தேசியத்தை வென்றெடுக்கப் போராடியதன் விளைவாக யுத்த நிறுத்தமும் சமாதான நடவடிக்கையும் பேச்சுவார்த்தைக்கான

(8ஆம் பக்கம் பார்க்க)

## வாழ்த்துகின்றோம்



ஆழியிலே தோன்றியிடும் முத்தைப்போலே
முளையிலே தோன்றிடும் இரத்தினங்கள்
கல்விக் கடலதனை அள்ளிச் சொரிந்திடுவார்
வெள்ளைமனமுடைய சொல்லின் வீரர் இவர்

கோயிலிலே கொடுக்கும் சாதம் போலே
பள்ளியிலே கொடுத்திடுவார் கல்விதனை,
உலகினையே ஆண்டிடும் உன்னத வீரர்தனை
மாண்புடனே போற்றுகின்றோம் மனிதர் அனைவரும்

பணிவுடனே போற்றுகின்றோம் பண்பாளர் இவர்களை
கனிவுடனே கரங்குவிப்போம் கனிவான இந்நாளில்
மாணவர் மனதில் மாசை நீக்கிவிடும்
தேனூறும் கடலதனை வாழ்த்தி வணங்குகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
கிளி. மகாவித்தியாலயம் (?) கல்லூரி


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 03 | | 06 |
| 06 | | 10 |
| 1981 | | 2000 |



# லெப்.கதிர் எழிலன்

**அந்தோனிப்பிள்ளை இலங்கரூபன்**

சம்பவம்:- அரியாலைப்பகுதியில் ஏற்பட்ட எதிர்பாராத மோதலின்போது

இந்நாளில் இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.

தபாற்கந்தோர் அருகாமை
மல்லாவி, யோகபுரம். (3825)

குடும்பத்தினர்.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

பாலகிருஷ்ணன் கிருஸ்ணகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல: 742003418 V 26.09.2003 அன்று விசுவமடுவிற்கும் சுதந்திரபுரச்சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். (3819)

### ஆராதனா ஒலிப்பதிவு

கௌரிகாப்பு பாடல்கள், கந்தசஷ்டி கவசம், பக்தி கீதங்கள், புதிய திரை இசைக்கதம்பங்கள், பழைய பாடல்கள், ஒலிச்சித்திரங்களும் ஒலிநாடா உடன் பெற்றுக் கொள்ள.... யாழ். ஒளிபுகைப்படக் கலையகம்- டிப்போச் சந்தி, யாழ். அருவி குளிரகம்- கிளிநொச்சி, ஆராதனா ஒலிப்பதிவு- வவுனியா. (3812)

## பொலிஸ் அதிகாரி மீது சந்தேகம்

கொழும்பு முல்லேரியாப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டமை தொடர்பில் பொலிஸ் அதிகாரி ஒருவர் மீதும் சந்தேகம் எழுந்துள்ளது. எனினும் அவரை விசாரணை செய்வதற்கான உரிய அறிவித்தல்கள் இன்னமும் தமக்குக் கிடைக்கவில்லை என போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கடந்த வாரம் முல்லேரியாப் பகுதியில் பல இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. எனினும் இது தொடர்பான முக்கிய கோடீஸ்வர வர்த்தகர் இன்னும் பொலிசாரால் கைது செய்யப்படவில்லை. (32)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 30-03-1949 | 07-10-2003 |

# வேலுப்பிள்ளை சோமசுந்தரம்

**(சிலாவத்தை, முல்லைத்தீவு)**

*விதியின் கொடிய வலிமையை எண்ணி*
*நோகிறது மனசு*
*இனியதையெல்லாம் நொடியில் தொலைத்துவிட்டு*
*முடிவற்ற கேள்விகளோடு*
*நாளைகளுக்காகக் காத்திருக்கின்றோம்.*
*கனவுகளாக, காற்றாக*
*நாம் காணும் நல்ல மனிதர்களாக*
*எங்கள் தோளோடு*
*வாழ்வோடு வருவீர்களெனக் காத்திருக்கின்றோம்!*

07-10-2003 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு நினைவுநாள் நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-7791) -குடும்பத்தினர்.


# கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்

## இராமநாதபுரம்

## உலக ஆசிரியர் தினம் ஒக்ரோபர் 06 - 2003

## "எழுத்தறிவித்தவன் இறைவன்"

பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் பல்தர உயர்ச்சிக்கும்
அயராது உழைத்த எமது பாடசாலை ஆசிரியர்களையும்,
வலயக் கல்விப் பணிமனை சார்ந்த சகலரையும் வாழ்த்துகின்றோம்.

அழகிற்கு அழகு செய்யும்
அழகிய மிக நவீன முறையில்
தங்கப் பவுண் நகைகளுக்கு
**புதிய மதியாசி நகை மாடம்**
முல்லை வீதி, தருமபுரம்.
(சி 8631)

**பழைய மாணவர் சங்கம்**
கிளி/இராமநாதபுரம்
மகா வித்தியாலயம்
இராமநாதபுரம்

• உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க-வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்
• 22கரட் ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்
தரம் நாடுவோர் தயங்காமல் நாடுமிடம்
**மீனாட்சி நகைமாடம்**
கண்டி வீதி, கிளிநொச்சி

# பலஸ்தீன தலைவரை நாடுகடத்தும் இஸ்ரேலின் தீர்மானம் வலுவடைகிறது!

## அமெரிக்கா தலையீட்டால் சிறு தயக்கம்

**பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத்தை நாடு கடத்த வேண்டும் என்று கோரிக்கை இஸ்ரேலில் வலுவடைந்து வருகிறது. இஸ்ரேலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலையடுத்து இந்தநிலைப்பாடு முனைப்புப் பெற்றுள்ளது.**



இஸ்ரேலியர்களுக்கு எதிரான இஸ்லாமியர்களின் தாக்குதல்களுக்கு யஸீா அரபாத்தே பொறுப்பென தெரிவிக்கப்பட்ட

பின்னர் கடந்த மாதம் இஸ்ரேலிய அமைச்சரவை கொள்ளையளவில் அரபாத்தை பதவியில் இருந்து நீக்குவது எனத் தீர்மானித்தது.

மேற்குக்கரையில் இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதலினால் அரைவாசி சேதமடைந்த நிலையில் தமது தலைமைக் காரியாலயத்தினுள் வாழ்ந்து வரும் அரபாத்தை எவ்வாறு எப்போது அங்கிருந்து நாடு கடத்துவது என்பது குறித்து இஸ்ரேல் இது வரை எதனையும் தெரிவிக்கவில்லை.

அரபாத்தின் தலைமை காரியாலயம் மீது தாக்குதல் நடாத்தினால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என இஸ்ரேல் கூறி வருகின்ற போதிலும் "தான் சரணடைவதை விட உயிர்துறப்பதே மேன்மையானதென" அரபாத் கூறியுள்ளார்.

எனினும் பல நூற்றுக்கணக்கான இஸ்ரேலியர்களைக் கொலை செய்துள்ள தீவிரவாதக் குழுக்கள் மீது நடவடிக்கை எடுக்க பலஸ்தீன அதிகாரசபை மறுப்புத் தெரிவித்து வருவதால் அரபாத்தை பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற அழுத்தங்கள் இஸ்ரேலில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

எவ்வாறாயினும் அரபாத் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து அமெரிக்காவின் கருத்துக்களையும் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளதென இஸ்ரேலிய பிரதம மந்திரி ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளார். அரபாத்தை நாடு கடத்துவதையோ அல்லது கொலை செய்வதையோ அரபு நாடுகள் மற்றும் முஸ்லிம் உலகம் ஆகியவற்றை ஆத்திரமடையச் செய்யும் செயலாகுமென அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார்.

## ஜிகாத் உரிமை கோரல்

இஸ்ரேலில் நேற்று முன்தினம் நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலுக்கு இஸ்லாமிய ஜிகாத் என்ற தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்தத் தற்கொலைத் தாக்குதலில் 19 பேர் பலியானதுடன் ஐம்பதுக்கும் அதிகமானோர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளமையும் தெரிந்ததே.



பிரான்சிய நகரங்களில் ஒரே நேரத்தில் நடைபெற்ற மிதிவெடி எதிர்ப்புப் போராட்டத்தின் போது தமது பாதணிகளை தூக்கியெறியும் பெண்.

# காஸா நிலப்பகுதிகளை நோக்கி இஸ்ரேல் தொடர் ஏவுகணைத் தாக்குதல்!

## -பெருமளவு கட்டடங்கள் சேதம்

இஸ்ரேலில் இடம் பெற்ற தற்கொலைத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில், பலஸ்தீனத்தின் காஸா பகுதியில் ஏவுகணைகளை வீசி இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இஸ்ரேலிய இராணுவ உலங்கு வானூர்திகள் காஸா நகரிலுள்ள தீவிரவாதிகளின் இருப் பிடங்கள் மீது ஏவுகணைகளை வீசி வருகின்றன. ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் ஆயுதப்பிரிவின் முக்கிய பொறுப்பு வகிக்கும் முன்டல் குவானிற்றா என்பவரின் இருப்பிடம் நோக்கி இத் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.

யசீர் அரபாத்தின் முன்னைய அலுவலகத்தின் அருகில் நடத்தப்பட்டுவரும் இத் தாக்குதலால் அப்பகுதியில் பெருமளவு கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

இந்த தாக்குதல் குறித்து அரபாத் தலைமையிலான பி.எல்.ஓ. அமைப்பின் செயல்குழு கூடி விவாதித்து இஸ்ரேலின் தாக்குதலுக்கும் இங்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

# பயங்கர வாதத்தை எதிர்க்க அமெரிக்கா ஆதரவில்லை!

## -ஏமனின் குற்றச்சாட்டு நிராகரிப்பு

அரபு நாடான ஏமனின் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்திற்காக அந் நாட்டிற்கு அமெரிக்கா போதியளவு ஆதரவு தரவில்லையென ஏமன் பிரதம மந்திரி தெரிவித்த குற்றச்சாட்டை அமெரிக்க உதவி வெளிநாட்டமைச்சர் வில்லியம் பேன்ஸ் நிராகரித்துள்ளார்.

ஏமனின் எல்லைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதும் பொருளாதாரத்திற்கும் ஏமன் பிரஜைகளின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுவது அனைத்துமே உங்கள் பொறுப்பாகுமென அமெரிக்கா உதவியமைச்சர் ஏமன் பிரதம மந்திரிக்கு பதிலளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





இஸ்ரேலில் நேற்று முன்தினம் ஹய்பா நகரில் நடந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் காயமடைந்த ஒருவர் அப்புறப்படுத்தப்படுவதையும் காயமடைந்த குழந்தைக் கருகில் சூழ்நிற்கும் மக்களையும் காண்க.

# அமெரிக்க,சீன சனாதிபதிகள் அவுஸ்திரேலியா விஜயம்

ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பின் நாடுகளினது சனாதிபதிகள் பங்குபற்றும் உச்சிமாநாடு தாய்லாந்தில் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. மாநாடு முடிவடைந்தவுடன் அமெரிக்க சனாதிபதி புஷ்ஷும் சீன சனாதிபதியும் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்யவுள்ளனர். அவுஸ்திரேலியப் பிரதமர் கருத்துத் தெரிவிக்கையில், புஷ் 23 ஆம் திகதி கான்பரா வருகை தருவார் எனவும், சீன சனாதிபதி 24 ஆம் திகதி விஜயத்தை மேற்கொள்வார் என்றும் கூறியுள்ளார். சீன சனாதிபதி அவுஸ்திரேலியாவில் தங்கியிருக்கும் நாட்களில் அந் நாட்டின் பாராளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.

# இந்தியாவே பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த திணறுகையில் எம்மால் எப்படி முடியும்

## பாகிஸ்தான் சனாதிபதி கேள்வி

(இஸ்லாமாபாத்)

எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக உறுதியளிக்க முடியாதென பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கூறியுள்ளார்.

இந்திய எல்லையில் 70 ஆயிரம் படையினர் குவிக்கப்பட்டுள்ள போதிலும் அவர்களால் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த முடியாத போது இந்திய கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நிலவும் பயங்கரவாதத்தை எவ்வாறு பாகிஸ்தானால் கட்டுப்படுத்த முடியுமென அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அல்-கைதா மற்றும தலிபான் அமைப்புக்களை ஒழிக்க பாகிஸ் தான் நடவடிக்கை எடுக்கவில்லை யென்ற குற்றச்சாட்டையும் அவர் மறுத்துள்ளார்.

பாகிஸ்தானின் நலன் கருதி அல்-கைதா மற்றும் பயங்கரவாத அமைப்புக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் இது வரை ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுப் பகுதியில் இடம்பெறும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் எப்போதும் ஆதரவளிக்கவில்லை யென அவர் மேலும் கூறியுள்ளார்.



ஆபிரிக்காவில் மிருகக்காட்சிச்சாலையொன்றில் உள்ள நீர் நிலையில் நீர்யானை தனது குட்டியுடன் நீந்தி விளையாடுகிறது. 3மாத வயதைக் கொண்ட குட்டியின் நிறை 260 இறாத்தலாகும்.



பிரேசிலியாவில் சில நாட்களுக்கு முன் வெற்றிகரமான சத்திர சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்ட இரட்டைக் குழந்தைகளை ஏந்திய வண்ணம் காணப்படும் மேரியா ஜோஸ் த சில்வா (மேல்) பிரிக்கப்படுவதற்கு முன் குழந்தைகளான வெட்டிசியா(இடது) லொறினா(வலது) ஆகியோரைக் காண்கின்றீர்கள்

# "கூட்டணியும் குணவன்ச தேரரும்"

1956ஆம் ஆண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சிபீடம் ஏற்றியவர் களனி விகாரையின் புத்தரகித்த தேரராவார். 1959ல் அமைச்சரவையில் குழப்பத்தை தோற்றுவித்து அக்கட்சியையும் அரசையும் தகர்த்ததும், அதேவருடத்தில் பண்டாரநாயக்கவை கொன்று சிறில.சு.க இல்லாமல் செய்ததும் புத்தரகித்த தேரரே.

அதன்பின்னர் அக் கட்சியை ஆதரித்து கட்டியெழுப்பி வேறொரு தலைமையை ஏற்படுத்தியதும் வேறும் தேரரே. அவர் ஹேறன் பிட்ட கெதர ஞானசீஹ ஒரு தேரர். அவர் எழுதிய நூலில் "பிரதமர் பண்டாரநாயக்கவின் கொலைக்குப் பின்னர் கட்சியின் தலைமைத் துவத்தை ஏற்க ஸ்ரீமாவோ விரும்பவில்லை என்றதால் கட்சிபற்றி தமது நம்பிக்கை சிதறடிக்கப்படுகின்றது என்பது எனக்கு புலப்படுகின்றது. அதை அறிவித்தது. தொலைபேசி செய்தி, அதைக் கூறியவர் ஓர் அமைச்சர் என்பது மட்டும் எனக்கு ஞாபகம். அந்தச் செய்தியில் "நாம் பெட்டிபடுக்கைகளை சுருட்டிக்கொண்டு வீட்டுக்குப் போகின்றோம். ஸ்ரீமாவோ அம்மையார் தலைமைப் பொறுப்பை ஏற்கமறுப்பதினால் உங்களுக்கு முடிந்ததை செய்யுங்கள்" என்றிருந்தது என தேரர் குறிப்பேட்டில் எழுதியிருந்தார்.

அரசை இடது சாரிகள் பக்கத்தில் இவர் இழுக்க அரசு வலதுசாரிகளின் பக்கம் திரும்பியமை. அதனாலேயே 1964ஆம் ஆண்டில் அரசு கவிழ நேர்ந்தது.

அன்று புத்தரகித்த தேரர் நடத்திய நாடகமும் பின்னர் ஹேறன்பிட்டகெதர ஞானசீஹ நடத்திய நாடகமும் இல்லாத சிறில.சு கட்சி இருக்கவில்லை. இந்த இரு பிக்குகளும் கட்சியை நாசமாக்கியது

யாற்றியவராவார். சடலங்களை பொதுமக்களுக்குக் காட்டுமாறு படையதிகாரிகளுக்கு உத்தரவிட்டவர்.

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையில் பிக்குமார்களின் நடவடிக்கை எப்படி இருந்தது என்பதை விளக்கவேண்டுமாயின் அப்போது மகாவலி அபிவிருத்தி அமைச்சராயிருந்த காமினி திசாநாயக்க இவர்களை ஜே.ஆரிடம் அழைத்து சென்று பேசி அவர்களை சாந்தப்

ராத விதமாகக் கொலைசெய்யப்பட்டார். அதன் பின்னர் அவர் அணுகியது பிரேமதாசாவின் நெருங்கிய சகாவான சிறிசேன கூரேயிடம். அந்நேரம் அவர் கட்சியின் செயலாளராக வருவதற்கு முண்டியடித்தார். எனினும் ரணில் அதற்கு இடமளிக்காமையால் இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு தோன்றியது. இவ்வேளையிலும் மேற்படி பிக்கு ஏனைய ஐ.தே.க. உறுப்பினரோடு கலந்துஉரையாடி ரணில்-கூரே இருவரினதும் முரண்பாட்டை

உண்மை. ஆனால் இவர்களிருவரும் இல்லாதிருந்தால் இந்நாட்டில் ஒருநாளும் ஐ.தே.க. வுக்கு எதிரான தேசிய எதிர்ப்பு இயக்கம் ஒன்று உருவாகாமல் இருந்திருக்கும். 1956ஆம் ஆண்டில் சங்கநாயக்கர்கள், வைத்தியர்கள், ஆசிரியர்கள்,விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து புத்தரகித்த அன்று ஐ.தே.க. வுக்கெதிராகப் போராடினார். 1960 முதல் 70 வரை ஞானசீஹ தேரர் செயற்பட்டார்.

அதேபோன்று இன்றும் அவ்வாறு ஐ.தே.க. வுக்கு எதிராகப் போராட நினைப்பவர் வேறுயாருமல்ல. எல்லே குணவன்ச தேரர் ஆவார். அவர் இன்று முயற்சி செய்வது ஐ.தே.க. வுக்கு எதிரான தேசபிரேமி இயக்கம் ஒன்றை அமைப்பதற்கே. அதற்கு அவர் கை வைத்தது இன்று நேற்றல்ல, அது அவரின் நீண்டகால திட்டம். அதனாலேயே ஜே.வி.பி., சிறில.சு கட்சி கூட்டணி முறிவடைந்தாலும் இக்கட்சிகளின் முக்கிய உறுப்பினர்களை ஒன்றாக்கி தேசபிரேமி இயக்கத்தை தோற்றுவிக்க இவருக்கு முடிந்தது. இவரும் மதச்சார்பு நடவடிக்கைகள் போன்று அரசியலிலும் நன்கு



விமல் வீரவன்சவுடன் குணவன்ச தேரர்

படுத்த முயன்றமையிலிருந்து புரிகிறது. ஜே.ஆரும் இவர்கள் மீது 1983ல் எப்படி விசுவாசமாக இருந்தார் என்பதை அப்பிக்குமாரின் விகாரைகளில் ஆயுதங்கள் இருக்கின்றனவா என சோதனையிடப்பணித்தமையிலிருந்து புலப்படும். எனினும் பிக்குகளின் ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்த யாரும் திராணியற்றவர்களாக இருந்தனர். 1983 முதல் இனப்பிரச்சனைக்கு அரசியற் தீர்வு காணப்பட எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கெதிராக சிங்களவர்க்கு ஆதரவாக இவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இருந்தும் அவர்கள் காமினி திசாநாயக்கவின் பக்கமே இருந்தனர். 1987ல் இந்திய - சிறிலங்கா ஒப்பந்தத்தில் காமினியும் கைவைத்தபோது அவர்கள் பிரேமதாசாவின் பக்கம் திரும்பினர். பிரேமதாசா சனாதிபதியாக தேர்தலில் வெற்றி பெற்றது இவர்களின் நடவடிக்கையினாலேயே. இந்நேரத்திலும் மேற்படி எல்லே குணவன்ச குறிப்பிடத்தக்களவு பாடுபட்டார். ஒப்பந்தத்துக்கு எதிராகவும் பிரேமதாசாவின் பக்கம் நின்றார். இந்நேரத்தில் ஜே.வி.பி யினரின் எழுச்சியின்போது அவர்களை அடக்கவும் பிரேமதாசாவுக்குத் துணையாக குணவன்ச பிக்கு பணியாற்றினார்.

ராணுவத்தை உற்சாகப்படுத்தும் வகையில் புரட்சிக் கீதங்களை அப்போது இந்த குணவன்ச பிக்கு எழுதினார். அக்கீதங்களுக்கு வானொலியும் முக்கியத்துவம் தந்தது. பிரேமதாசா இந்திய இராணுவத்தைக் கலைப்பதற்கு விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய போதும் தேரர் அவருக்கு ஆதரவாகவே செயற்பட்டார். ஆயினும் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதாக பிரேமதாசா மீது குற்றம் சாட்டி லலித்தும், காமினியும் கண்டித்தபோது தேரர்

தீர்க்க முன்வந்தார். எனினும் சங்க நாயக்கர்கள் தர்ம உபதேசம் செய்வதை விடுத்து தமது அரசியல் விவகாரங்களில் தலையிட வேண்டாம் என ரணில் கைநழுவினார். இதனால் ரணிலுக்கு எதிராக குணவன்ச பிக்கு செயற்பட ஆரம்பித்தார். கூரேயின் ஆதரவாளர் சிலரை கட்சியிலிருந்து பிரிக்க இவர் பாடுபட்டார். அதன் பின்னர் 1999ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலின் போது ஐ.தே.க.வை விட்டு விலகிச் சென்ற அநுனுகம, விஜயபால மெண்டிஸ்,சுசில்முனசிங்க,நந்தா மத்தியூ ஆகியோருடன் இணைந்தார். பின்னர் சிறில.சு.கட்சியின் கீழான பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கொண்டார். எனினும் சந்திரிகாவினதும் இப்பிக்குவினதும் தொடர்பு அண்மிக்கவில்லை. எனினும் பொ.ஐ. முன்னணிக்காக இவர் உழைத்தார்.2001ஆம் ஆண்டு பொ.ஐ.மு. இரண்டாகப் பிளவுபடுவதைத் தடுக்க இவர் முயன்றார். எனினும் கட்சி முறிவடைந்து பதவி கவிழ்ந்தது.

**உபுள் ஜோசப் பெர்ணாண்டோ**
**(லங்கதீப)**
**தமிழில் வடிவேல்.**

இன்று அவருக்குத் தேவையாக் இருப்பது ஐ.தே.க.வுக்கு எதிரான தேசிய கூட்டணி ஒன்றே. இதற்காகவே ஜே.வி.பி.யையும், சிறில.சு.க.வையும் இணைத்துவிட முயல்கிறார். சந்திரிகா தட்டிக்கழிக்கிறார். இதற்காக பிக்கு சுதந்திரக்கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து சந்திரிகாவை தவிர்த்து கூட்டணி ஒன்றை உருவாக்க முனைகிறார். இது ஐ.தே.க. வுக்குள் கூரேயை திணிக்க முற்பட்ட செயலுக்கு ஒத்ததாகும். ஐ.தே.க.வுக்குள் கூரேயை இணைக்க முயன்றமை பிரேமதாசாவின் வருடாந்த நினைவஞ்சலியின் போது- ஐ.தே.க. உறுப்பினர்களுக்கு அழைப்புவிடுத்த நேரம் ஆயினும் ரணில் அதற்கு இடம்தரவில்லை.இன்று சந்திரிகாவுக்கு நடைபெறுவதும் இதுவே. அன்று ரணில் இல்லாத ஐ.தே.கட்சி இன்று சந்திரிகா இல்லாத சிறில.சு.கட்சி. பிக்குகளின் இந் நடவடிக்கைகளால் ஐ.தே.க. வினர் பிரிந்து சென்றது போல சிறில.சு.கட்சியினரும் பிரிந்து செல்ல நேரிடுமோ? அது எல்லே குணவன்ச தேரருக்கு மட்டுமே தெரியும்.

[illegible] அவர் முடிந்ததை அப்போது செய்தார். அதாவது தலைமைப் பொறுப்பை மட்டும் பொறுப்பெடுங்கள் மிகுதியை நாங்கள் கவனிப்போம். என்று ஞானசீக தேரர் குறிப்பிட்டிருந்தார். அதன்பின்னர் அம்மையார் தலைமைப்பொறுப்பை ஏற்றார். இந்த ஞானசீஹ தேரர் புத்தரக்கித்ததேரர் சீரழித்துச், சென்ற கட்சியை உயிரைக்கொடுத்து கட்டியெழுப்பினர். அது மட்டுமன்றி 1960ஆம் ஆண்டில் சிறி.சு.க.கட்சி, அரசைக் கைப்பற்றவும் வழி சமைத்தார். ஆயினும் அதன் பின்னரும கட்சி பிளவுபட அவர் காரணமாகினார். அது

தேர்ச்சியுள்ளவர். யார் இந்த எல்லே குணவன்ச? அவரைப் பற்றி சிறிது நோக்குவோம். பயங்கரவாதம் என்பது பற்றி முன்னர் எழுதப்பட்ட நூலில் 1983 கலவரத்தில் பங்குகொண்டோர் வரிசையில் இவரின் பெயர் முதலாவதாக குறிப்பிடப்படுகிறது. இந்த குணவன்ச என்பவர் அன்று விடுதலைப்புலிகளின் திருநெல்வேலித் தாக்குதலில் பலியான இராணுவத்தினரின் சடலங்கள் பொரளை மயானத்துக்கு எடுத்து வரும் வரை காத்து நின்றோரை வன்முறைக்குத் தூண்டும் நோக்கில் அங்கு உரை

மேலும் கூடுதலாக ஆதரவளித்தார். பயமின்றி பாதுகாக்க முன்வந்தார். இதனால் இவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் துவேசப் பார்வையில் அகப்பட்டுக் கொண்டார். அத்துலத்முதலியின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்ளச்சென்ற சுதந்திரக் கட்சியினர் இவரின் வீட்டைத் தாக்கினர். பிரேமதாசாவின் வலக்கரமாக விளங்கிய இவர் பிரேமதாசாவின் மறைவுக்குப் பின்னர் தமது பழைய அரசியல் சகாவான காமினியிடம் தஞ்சம் புகுந்தார். 1994ல் அவர் சனாதிபதியாகப் போட்டியிட்டவேளை அவர் வெற்றி பெறவேண்டுமெனப் பாடுபட்டார் எனினும் காமினி எதிர்பா

## உலக ஆசிரியர் நாளை ஒட்டி நடைபெற்ற

# தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் தேர்வில் பரிசில்கள், சான்றிதழ்கள் பெறுவோர் விபரம்

உலக ஆசிரியர் நாளை முன்னிட்டு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையும், தமிழ் வளர்ச்சிக்கழகமும் இணைந்து வடக்கு கிழக்கு, மலையக பள்ளிகளுக்கிடையே நடத்திய, தமிழ் மொழி எழுத்தாக்கத் திறன் தேர்வு முடிவுகள் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையால் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கல்வி வலயங்களிலும் ஆகக் கூடிய மதிப்பெண்ணைப் பெற்ற முதல் மூவருக்கும் ரூபா 1000 பணப் பரிசும், சான்றிதழும் வழங்கப்படவிருக்கின்றன. அடுத்த நிலையில் உள்ள இருவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

உலக ஆசிரியர் நாளான இன்று பரிசும் சான்றிதழும் பெறத்தக்கதாக குறித்த கல்வி வலயங்களுக்கு இவை அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

தேசிய நிலையிலும் வலய நிலையிலும் பரிசு பெறுபவர்களினதும் சான்றிதழ் பெறுபவர்களினதும் விபரம் வருமாறு.

***தேசிய மட்ட பெறுபேற்று முடிவுகள்***

பி. யோகராசா சது-இறாணமடு இந்து ம.வி சம்மாந்துறை வலயம் நிலை -01, செல்வி. கா.ஜெகதீஸ்வரி யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி வலிகாமம் வலயம் நிலை 02, சின்னத்தம்பி விசுவாசம் கிளி/பூநகரி ம.வி கிளிநொச்சி நிலை- 02, திருமதி க.சிறீதரன் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி தென்மராட்சி வலயம் நிலை- 04, செல்வி ஜீவரஞ்சினி சின்னத்தம்பி கிளி/வட்டக்கச்சி ம.வி கிளிநொச்சி வலயம் நிலை- 04

**வலய மட்ட பெறுபேற்று முடிவுகள்**

*யாழ்ப்பாண வலயம்*

சுந்தரம் வைகுந்த நாதன் யா/புனித பத்திரிசியார் கல்லூரி நிலை - 01, திருமதி விஸ்வ தேவி புஸ்பநாதன் யா/வேம்படி மகளிர்கல்லூரி நிலை- 01, நாகேந்திரன் புவனேந்திரன் யாழ்/யாழ் மத்திய கல்லூரி நிலை- 03, திருமதி. சத்தியபவானி செபமாலைதாள் யா/பெரிய புலம் ம.வி நிலை- 04,மயிலு ரங்கநாதன் யா/ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் ம.வி, நிலை- 05

*வலிகாமம் வலயம்*

கா.சசிதரன் யா/அருணோதயக்கல்லூரி நிலை- 01, செல்வி பூதன் ஜெயமலர் யா/விக்ரோறியாக் கல்லூரி நிலை- 02, த. தயானந்தன் யா/இளவாலை மெய்கண்டான் ம.வி. நிலை-02, சு.சிறிக்குமரன் யா/ ஏழாலை சிறிமுருகன் வித்தியாலயம் நிலை- 04, திருமதி மகாலிங்கசிவம் கலைவாணி யா/இராமநாதன் கல்லூரி நிலை- 05,

*வடமராட்சி வலயம்*

து.ஜெயதேவன் யா/வெற்றிலைக்கேணி ம.வி நிலை -01, து.அருந்தவசீலன் யா/அம்பன் அ.மி.த.க.பாடசாலை நிலை- 02, கி. தருமலிங்கம் யா/ஞானசாரியார் கல்லூரி நிலை- 03, செல்வி ஆ.கந்தசாமி யா/நாகர்கோவில் ம.வி. நிலை- 04, த.முரளி தரன் யா/உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரி நிலை- 05,

*தென்மராட்சி வலயம்*

ம.மகேசன் யா/வீரசிங்கம் ம.வி நிலை- 01, ப.மகேந்திரன் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி நிலை- 02, அருணாசலம் மனோரஞ்சிதன் யா/சந்திரபுஸ்கந்த வரோதயக்கல்லூரி நிலை- 02, க. ஈஸ்வரன் யா/மீசாலை வீரசிங்கம் ம.வி. நிலை- 04, திருமதி. சந்திரதேவன் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி நிலை- 05, க.சிறீதரன் யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி

*தீவக வலயம்*

திருமதி பங்கயற்செல்வி யோகநாதன் யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி நிலை- 01, அமிர்தேஸ்வர சர்மா மனோகரன் யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி நிலை- 02, திருமதி ஆனந்தகௌரி குமாரதாசன் யா/சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி நிலை 03, நடராசா கணேசமூர்த்தி யா/கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி நிலை- 04, திருமதி சுமதி சுரேந்திரன் யா/சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வி நிலை - 04,

*கிளிநொச்சி வலயம*

செல்வி. அருளாம்பிகை அருளம்பலம் கிளி/மத்தியகல்லூரி நிலை -01, செல்வி தமிழ்ச்செல்வி கந்தசாமி கிளி அழகாபுரி ம.வி நிலை -02, திருமதி இரஞ்சிதமலர் அருணா கிளி/இந்துக் கல்லூரி நிலை- 03, செல்வி வளர்மதி செல்வராசா கிளி/பரந்தன் அ.த.க. பாடசாலை நிலை-04. திருமதி செல்வநாயகி இராஜ ரட்ணம் கிளி/ தர்மபுரம் ம.வி. நிலை05.

*முல்லைத்தீவு வலயம்*

செல்வி த. மேரி சுகி மு/ முல்லைத்தீவு ம.வி நிலை- 01. செல்வி ப.நாகநளினி மு/விசுவமடு ம.வி நிலை -02, சி.குணபாலன் மு/தேவிபுரம் அ.த.க. பாடசாலை நிலை- 03, திருமதி தயா அரசரட்ணம் மு/விசுவமடு ம.வி நிலை- 04, திரு.இ.ஜெகதாசன் மு/விசுவமடு வித்தியாலயம் நிலை- 05

*துணுக்காய் வலயம்*

மு.வைத்திலிங்கம் மு/முத்தையன்கட்டு வலதுகரை அ.த.க.பா. நிலை -01, திரு இராம நாதன் இன்பதாஸ் மு/பாலிநகர் ம.வி நிலை-02,செல்வி செ.சந்திரகலா மு/திருமுறிகண்டி இ.த.க.பா. நிலை -03, கணபதிமுருகேசு மு/வவுனிக் குளம் படிவம் 04 அ.த.க.பா. நிலை -04, செல்வி சின்னையா ஜெயநிதி மு/தேறாங்கண்டல் அ.த.க.பா நிலை- 05,

*மடு வலயம்*

கி.கெலின்றோஸ்மன்/தேவன்பிட்டி றோ. க.பா. நிலை-01, திருமதி. தே.செபஸ்ரின் மன்./ஆன்டான்குளம் றோ.க.பா நிலை- 02,செ.ப விமலதாஸ் மன்/கருவாங்கண்டல் றோ.க.பா நிலை-03, திருமதி.பு.சிவகுமார் மன்/பெரியமடு ம.வி. நிலை- 04,

*மன்னார் வலயம்*

க.றெஜினா சந்தியோகுலோகு மன்/பேசாலை பற்றிமா ம.வி நிலை-01, து.இராமதாஸ் மன்/சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி நிலை- 02,திருமதி றே.இராமதாஸ் மன்/புனித லூசியா ம.வி நிலை- 03 திருமதி அ.தியூரிசியஸ் பீரிஸ் மன்/சென்.ஆன்றம.வி. நிலை- 04, திருமதி.வ.ஜெகநாதன் மன்/முருங்கன் ம.வி. நிலை- 05,

*வவுனியா வடக்கு வலயம்*

திருமதி பகீதரன் ஜெயகௌரி வ/புதுக்குளம் ம.வி. நிலை- 01, திருமதி. இராஜேஸ்வரி தெய்வேந்திரன் வ/புதுக்குளம் ம.வி. நிலை

(7ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியத்துவம் கொச்சைப்படுத்தப் படுகிறதா?

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்ற பொன்மொழி எங்களுக்குச் சொந்தமானது. ஆசிரியன் "ஆசான்" எனவும் "உபாத்தியாயன்" எனவும் விளங்கிய பெருமை எங்களுக்குரியது. இத்தகைய ஆசிரியர்கள் சமூகத்தின் அறிவொளிகளாக விளங்கினர். ஒரு தனி ஆசிரியனின் தன்னலமற்ற சேவையால் முன்னேறிய பல ஊர்கள் உண்டு. காலம் கடந்தும் பல அதிபர்கள், ஆசிரியர்களின் பெயர்கள் பலராலும் பேசப்படுகிறது என்றால் ஆசிரியத்துவம் உன்னதநிலையில் இருந்ததையே அது எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையில் ஒ[ல்]லாந்தர் காலத்தில் ஆசிரியன் மரணவிசாரணை அதிகாரியாகவிருந்தான், பிறப்பு இறப்பு பதிவாளனாக இருந்தான், கிராமங்களின் சமாதான நீதவான்களாகவும், நியமனம் பெறாத சமூகநல உத்தியோகத்தர்களாகவும் செயற்பட்டனர். கிராமங்களில் என்ன நகரங்களில் கூட ஆசிரியர்களின் அபிப்பிராயங்கள் முக்கிய செல்வாக்கைப் பெற்றிருந்தன. ஆசிரியர்களும் அத்தகைய பெருந்தன்மையுடனும், கௌரவத்துடனும், தாம் வறுமையிலும் செம்மையாக நடுநிலைமை தவறாதவர்களாக வாழ்ந்து வந்தனர்.

பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள், பட்டதாரிகள், பயிற்றப்பட்டவர்கள் என்று ஆசிரியர்கள் இருந்தகாலம் பொற்காலம் ஆகும். இவர்களின் அறிவுத் தேடல்களால் அக்காலத்தில் விழிப்புணர்வு மிக்க எழுத்துக்களையும், பேச்சுக்களையும் காண முடிந்தது. வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் விளைதிறன் உள்ள நிகழ்வாக இருந்தன. பாடசாலை என்பது கிராமத்தின் "அறிவு விளக்கு" என்ற நிலையில் போற்றப்பட்டது.

"பாடசாலைகளைத் திறவுங்கள். சிறைச்சாலைகளை மூடுங்கள்" என்ற கருத்தாழம் மிக்க சிந்தனைகள் இக்காலத்திற்கு உரியதாக இருந்தன. ஆழமான அறிவுவளம் உள்ளவன் தான் ஆசிரியனாக வரலாம் என்ற நிலை இருந்தது. அறிவுவளமில்லாதவன் ஆசிரியனாக இருக்கமாட்டான் என்ற நிலை 1970 வரை இலங்கையில் இருந்தது எனலாம். ஆசிரியன் பண்பானவனாக இருக்க வேண்டும். மாதிரி மனிதனாக இருக்க வேண்டும் என்ற காந்தியச் சிந்தனைகளை அக்காலத்து ஆசிரியர்களில் 95 வீதத்தினர் மதித்து நடந்தனர். தமது நடை உடை பாவனைகளில் மாணவர்கள் மதிக்கத்தக்க விதத்திலேயே நடந்தனர். மாணவர்களின் அறிவு, திறன் மனப்பாங்கு, வளர்ச்சியில் தம்மாலான தாக்கத்தை ஏற்படுத்தினர். பல ஆசிரியர்கள் தமது திறமையான கற்பித்தலால் தமது மாதிரியை தம் மாணாக்கரைப் பின்பற்ற வைத்தனர். பேச்சு, நடை என்பவற்றில் தன் ஆசிரியரை "போல" பின்பற்றி நடந்த மாணவர்கள் நிறையப் பேர் இருந்தனர் என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஆசிரியர்கள் எண்போர் அறிவுவளவாளர்கள். அவர்களை ஓரிடத்தில் தேங்க விட்டால் ஓரிடம் மட்டும் அறிவு வளமுள்ளதாக இருக்கும். ஏனைய இடங்கள் அறிவில் இருட்டாக மாறிவிடும் என்பதை கவனத்தில் எடுத்து அன்றைய ஆட்சியாளர்கள் கஷ்டப் பிரதேசங்களில் கட்டாய சேவை என்பதை அறிமுகப்படுத்தினார்கள். இரண்டாண்டு அல்லது மூன்றாண்டு கஷ்டப் பிரதேசங்களில் வேலை செய்ததின் பின் தீவின் நகரப்புறப் பாடசாலைகளில் தகுந்த பதவிகளில் அமர்த்தப்பட்டனர். இளமைத்துடிப்புடனும் ஆர்வத்துடனும் ஆசிரியப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டோர் பின்தங்கிய பிரதேசங்களில் செய்த சேவையால் அப்பிராந்திய மாணவர்கள் சகல துறைகளிலும் பிரகாசித்தனர். அப் பாடசாலைகளுக்கு இவ்வாறு மாறிமாறி வந்த ஆசிரியர்களால் ஆசிரியர்பற்றாக்குறையும் இருக்கவில்லை மாணவர்களும் விரக்திக்குள்ளாக வில்லை. ஆனால் இன்று ஒரே பாடசாலையில் 25 ஆண்டு, 30 ஆண்டு என்று வேலை செய்வோரைக் கௌரவிக்கின்றோமே தவிர கஷ்ரப்பிரதேச கல்விநிலையை எவரும் கவனிப்பாரில்லை.

1970ம் ஆண்டைத் தொடர்ந்து இலங்கையில் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு நிலைமாறத் தொடங்கியது. சான்றிதழ் உள்ள ஆசிரியமாணவர்கள் "தராதரப்பத்திரமற்ற

**இன்று உலக ஆசிரியர் தினம்**

ஆசிரியர்கள்" என்ற பெயரில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். இதிலிருந்து ஆசிரியத்துவத்தின் தனித்துவம் படிப்படியாக கொச்சைப் படுத்தப்படத் தொடங்கியது. பின்னர் வந்த அரசாங்கத்தினர் வறுமை ஒழிப்புக்கு ஆசிரியர்களை நியமித்தனர். ஜனசவிய ஆசிரியர், சமுர்த்தி ஆசிரியர் என்ற நிலையில் ஆசிரியர் நிலை கொச்சைப் படுத்தப்பட்டது. வறுமையை ஒழிக்க ஆசிரியர் பதவி வழங்குவது பொருத்தமானதா? என்பதை ஆசிரியத்துவத்தின் முறைமையோடு தொடர்புப்படுத்திச் சிந்தித்துப்பாருங்கள்.

ஆசிரியர் என்ற தொழில் சேவை தொடர்பானது. சேவை என்றால் "தொண்டு" என்று பொருள்படும். எனவே ஆசிரியன் என்பவன் தொண்டன் என்றாகும். ஆசிரியர் எல்லோரும் தொண்டராசிரியராக இருக்க, "தொண்டர் ஆசிரியர்" என்றொரு வகை ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். தொண்டர்கள் வேறு தொண்டுகள் செய்வது வித்தியாசமானது ஆனால் ஆசிரியத் தொண்டு செய்ய ஆகக்குறைந்தது அறிவுவளம் அவர்கட்குத் தேவை. ஆனால் இந்த தொண்டர்ஆசிரிய நியமனங்களில் பல ஊழல்களும்,நியமன ஒழுங்கீனங்களுமே அதிகரித்

**மா.கணபதிப்பிள்ளை**
(றோயல் கல்லூரி கொழும்பு.)

திருந்தனவே தவிர அவ்வாசிரியர்களின் சேமநலன் கருத்திலெடுக்கப்படவில்லை. உதாரணமாக ஒரு பாடசாலையில் ஆசிரியர் யாருமே இல்லை என்பதற்காக தொண்டராக ஆட்சேர்க்கப்பட்டு பல ஆண்டுகள் வேலை செய்த வளமுள்ள தொண்டர் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட, பணிப்பாளர்களால் சிபார்சு செய்யப்பட்டவேறு பலர் ஆசிரிய சேவையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலருக்கு ஆசிரியத்துவம் பற்றி எதுவுமே தெரியாது. நிலைமையை சற்று சிந்தியுங்கள். இது கொச்சைப்படுத்தலல்லவா?

ஆசிரியரைப் பயிற்சியில்லாமல் வகுப்பறைக்குள் நுழைய விடக்கூடாது. என புதிய கல்வி மறுசீரமைப்புகுறிப்பிடுகின்றது. ஆனால் எந்த ஆசிரியத்துவத்துக்கான முன் பயிற்சியுமில்லாத பலர் பாடசாலைகளில் அரசியல் தேவைகளுக்காக ஆசிரியராகிக்கொண்டு இருக்கின்றனர்.இலங்கையில் ஏறக்குறைய 10,000 பாடசாலைகள் உண்டு. 200,000 (இரண்டுலட்சம்) ஆசிரியர்கள் இப்பொழுது இலங்கையில் கடமையாற்றுகின்றனர். மொத்த மாணவர் தொகை 4,400,000 (நாற்பத்திநான்கு லட்சம்) ஆகும். இந்த அடிப்படையில் நோக்கின் 22 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் இருக்கின்றனர். இந்த நிலையில் ஏன் தீவு பரந்த மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்பதை கேட்க வேண்டியவர்கள் அதைவிடுத்து தொண்டர்ஆசிரியர் தேவையென ஆசிரியத்துவத்தை மேலும் கொச்சைப் படுத்துகின்றனர்.

சில மாகாணங்களில் தேவைக்கு அதிகமாக குவிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களை பன்முகபடுத்த முடியாத நிலைக்கு பொருத்தமற்ற நிர்வாகம் காரணமா? அல்லது அரசியல்வாதிகளின் பொறுப்பற்ற நிலை காரணமா? என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

மேலும் 200,000 (இரண்டு இலட்சம்) ஆசிரியர்களையும், நூறு ஆசிரிய மத்திய நிலையங்களையும், 17தேசிய கல்வி கல்லூரிகளையும் 16 ஆசிரியக்கல்லூரிகளையும் கவனத்தில் எடுத்து சேவையாற்றும் நோக்கில் கல்வி அமைச்சில் தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபை (NATE) என்றொரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்கு பங்காற்றுவதுடன் ஆசிரியர்களின் சகல சேமநலன்களையும் பேணும் அமைப்பாக இது ஆரம்பிக்கப்பட்டது. பல கல்வியியல் பேராசிரியர்கள இவ் அமைப்பு மிகச் சிறப்பாக இயங்குவதாகவே குறிப்பிட்டனர். ஆசிரியர்களின் தரநிர்ணயத்திற்கான அமைப்பு வேறொன்றும் இலங்கையில் இல்லை. தேசிய ஆசிரிய கல்வி அதிகாரசபை ஆண்டறிக்கைகளின்படி இவ் அமைப்புக்குகல்வி அமைச்சு பெருந் தொகைப் பணத்தைச் செலவழிப்பதாகவும் இல்லை. செலவு குறைந்த அதிகாரமுள்ள இந்த அமைப்பு ஆசிரியர் கல்விக்கு ஆக்கபூர்வமான பங்களிப்புச் செய்வதனால் தொடர்ந்து நடைமுறைப் படுத்துமாறு உலகவங்கியும் விதந்துரைத்துள்ளது. ஆனால் இந் நிறுவனம் இன்று நிறுத்தப்படல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதே வேளை இதற்கு பிரதியீடாக எந்நிறுவனம் இயங்கும் என்பதும் குறிப்பிடப்படவில்லை. அப்படியாயின் ஆசிரியர் கல்வி என்பது வெறும் கேலிக்கூத்தா? இது கொச்சைப் படுத்தல் அல்லாமல் வேறென்ன?

நிலைமை இவ்வாறிருக்க பாடசாலை மாணவர்களுக்கு சீருடை கொடுக்கப் போகின்றோம் என்று ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டது. இப்பணியை ஆசிரியர்கள மிக விசுவாசத்துடன் செய்துவந்தனர். பாடசாலைக்கு பிள்ளைகள் வராது இருந்தால் வரும்வரைசீருடையை வைத்திருந்து குறித்த மாணவர்களுக்கு கிடைக்கும் வகையிலே பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் அப்பணியை முறையாகத் திட்டமிட்டு நிறைவேற்றினார்கள். பெரும்பாலும் இந் நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் தமது நிலையை துர்ப்பிரயோகம் செய்யவில்லை என்றே குறிப்பிடலாம். அப்படி தவறு ஏதாவது ஒருபாடசாலையில் நிகழ்ந்திருந்தால் பொறுப்பற்ற ஆசிரிய நியமனத் தவறுதான் அதுவாக இருக்கும். ஆனால் இப்பணியை ஆசிரியர்கள் செய்வது நிறுத்தப்பட்டு கிராமசேவகர்களின் ஊடாக உதவி அரசாங்க அதிபர்களின் கவனத்துடன் அது வழங்கப்படும். என்று ஒரு முறையை அறிமுகப்படுத்தினர். பல மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் குறித்த படிவங்களை நிரப்பவே தெரியாது. இந்த நிலையில் பல மாணவர்கள் தமது சீருடைக்கு விண்ணப்பிக்கமுடியாத நிலை உள்ளது. விண்ணப்பித்தபின் ஒரு தினத்தில் சீருடை வழங்கப்பட்டது. அத்தினத்திற்கு போகாத பலர் விண்ணப்பப்படிவத்தை கொடுத்த பற்றுச் சீட்டுடன் சென்ற[ு] சீருடை எடுக்காது இன்றுவரை பொறுத்திருக்கின்றனர். இந்த சீருடை வழங்கல் ஏன் பாடசாலை மட்ட முகாமைத்துவத்தில் இருந்து எடுக்கப்பட்டது. ஆசிரியத்துவத்தை கொச்சைப்படுத்தலா? அல்லது அதிகாரப்பரவலாக்கலா? என்பது புரியாத புதிராகவே உள்ளது.

இலங்கை நிர்வாக சேவை (SLAS) உத்தியோகத்தர்களே கல்வியியல் பற்றி தீர்மானம் எடுக்கிறார்கள். அந்த நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் தமது பணியாளர்களான கிராமசேவையாளர்கள் மீது வைத்துள்ள அபரிமிதமான நம்பிக்கையை ஆசிரியர்களின் மீது வைக்காதது துன்பகரமானது. இதுவும் ஒருவகை கொச்சைப்படுத்தலாகும் எனப் பேசப்படுகிறது. இலங்கையில் கல்விநிர்வாகசேவை என்றொரு தனிச்சேவையும் உண்டு. இச்சேவையாளர்கள் இச் கொச்சைப்படுத்தல்களைப் பார்த்தும் பாராதவர்களாகவே இருக்கிறார்கள்.

மேலும் பாடசாலை மட்ட முகாமைத்துவம் பற்றி புதிய கல்வி மறுசீராக்கம் சிறப்பாக குறிப்பிடுகிறது. அண்மையில் வெளியிடப்பட்ட தரம் ஒன்று அனுமதிபற்றி தேசிய பாடசாலைகளின் மாணவர் ஆட்சேர்ப்புப் பட்டியலை துப்பறியும் பொலிசார் பரிசீலிப்பர் என்ற செய்தி பாடசாலைகளை மேலும் கொச்சைப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. ஒரு அதிபர், முகாமைத்துவக் குழு கொண்ட ஒரு நேர்முகப் பரீட்சையின் அடிப்படையிலேயே தேசிய பாடசாலைகளுக்கு தரம் ஒன்று மாணவர் அனுமதி நேர்முகப் பரீட்சை நடைபெறுகின்றன. இதற்கென்று அமைச்சின் சுற்றுநிருபம் ஒன்று அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் மாணவர் ஆட்சேர்ப்பு செய்வதில் தவறு இருக்குமானால் அமைச்சுக்கு மேன்முறையீடு செய்யலாம் என்ற நிலைதான் இதுவரை இருந்தது. இம்முறை ஏன் தொடர்ந்து பேணப்படவில்லை. பாடசாலை நிர்வாகத்தில் கொண்ட அதிருப்தியா? அல்லது பொலிஸ் திணைக்களத்தில் கொண்ட அபரிமிதமான நம்பிக்கையா? மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

அதிபரின் வேலையை கிராமசேவையாளர், துப்பறியும் பொலிசார் செய்வதுதான் பாடசாலை முகாமைத்துவத்தை வினைத்திறன் உள்ளதாக்கும் செயலா? அல்லது ஆசிரியத்துவத்தை கொச்சைப்படுத்தி கேவலமாக்கி அழித்தொழிக்கும் நிலையா? என்பது இன்று கேள்வியாகி விஞ்சி நிற்கின்றது.

## உலக தபால் தினம் கொண்டாட ஏற்பாடு

(அலுவலக செய்தியாளர்)

உலக தபால் தினம் எதிர்வரும் 9ஆம் திகதி சகல தபாலகங்களிலும் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி பிரதம தபாலகத்தில் அன்றைய தினம் காலை 9 மணிக்கு மங்கல விளக்கேற்றல், தேசியக்கொடி ஏற்றல் நிகழ்வுடன் உலக தபால் தினம் கொண்டாடப் படவுள்ளதென கிளிநொச்சி மாவட்ட தபாலதிபர் மா.பேரம்பலம் தெரிவித்துள்ளார். (சோ)

## ஐ.நா. செயலாளர் கொபி அனானின் இலங்கைக்கான விஜயம் ரத்து

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனான் இலங்கைக்கு விஜயம் செய்யமாட்டாரென தெரிவிக்கப்படுகிறது.

ஈராக் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தற்சமயம் முக்கிய பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணை பாதுகாப்புச் சபையின் ஏனைய நாடுகளால் இன்னும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதன் காரணமாகவே, கொபி அனானின் இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் இலங்கைக்கு விஜயம் செய்யும்வேளை, வன்னிக்கும் வருமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டமையும், இந்த விஜயத்தின் இரத்திற்குக் காரணமெனத் தெரியவருகிறது. (32)

## மட்டக்களப்பில் வாகனங்கள், பயணிகள் சிறிலங்காப் படையினரால் பரிசோதனை

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல வீதிகளிலும், சந்திகளிலும் பாதசாரிகளையும் வாகனங்களையும் சிறிலங்காப் படையினர் பரிசோதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுளளனர்.

காலையில் புறப்படும் மட்டக்களப்பு- கொழும்பு பயணிகள் பேருந்துகள் சத்துருக்கொண்டானில் நிறுத்தப்பட்டு பிரயாணிகள் சோதிக்கப்படுவதாக பிரயாணிகள் முறைப்பாடு செய்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரத்திலிருந்து 30மைல் தொலைவிலுள்ள கும்புறுமூலை ராணுவ முகாமில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதிக்கப்படுவதுடன் வி[ப]ரங்களும் திரட்டப்படுகின்றன.

சீமெ[ந்து] மற்றும் கட்டடப் பொருட்களை [ஏற்]றிவரும் லொறிகள் கும்புறுமூலை இராணுவ முகாமில் நிறுத்தப்பட்டு அடுத்த நாள் காலை பொலிசாரின் வழித்துணையுடன் மட்டக்களப்புக்கு கொண்டு செல்லப்படுவதாக வாகன உரிமையாளர்கள் முறைப்பாடு செய்துள்ளனர். விடுதலைப்புலிகளின் கைகளுக்கு இப்பொருட்கள் கிடைக்கப் பெறாமல் செய்வதற்கே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## தென்னை பயிர்ச்செய்கை அபிவிருத்தி ஊழியர் பற்றாக்குறையால் பின்னடைவு

(உடையார்கட்டு)

முல்லை மாவட்டத்தில் தென்னை பயிர்ச்செய்கை அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஊழியர்கள் பற்றாக்குறை காரணமாக பெரும் சிரமங்கள் எதிர் நோக்கப்படுகின்றது.

இந்த அபிவிருத்தி நடவடிக்கைக்காக ஆயிரக் கணக்கான விண்ணப்பங்கள் மக்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும் மந்தகதியிலேயே காணிகளைப் பார்வையிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஒரேயொரு தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் மட்டும் இம் மாவட்டத்தில் கடமையில் இருப்பதால் இந்நடவடிக்கையினை துரிதமாக மேற்கொள்ள முடியாதுள்ளது (19)

## ஏங்கிய காலம் மூவாண்டில்...

அன்னை மடியில் 19 - 09 - 1984

தமிழ்மண் விடிவில் 06 - 10 - 2000



### வீரவேங்கை தமிழ்மொழி

**தேவராசா ஸ்ரீரஞ்சினி**

[இல. 08, 30 வீட்டுத்திட்டம், உதயநகர் மேற்கு, கிளிநொச்சி]

எம் உயிர்ச் செல்வமே...
எண்ணிரண்டு வயதினில்
எதிரியவன் ஏவிவந்த
எறிகணையை எதிர்க்க
எழுந்திட்ட எம் தங்கையே...
ஐயிரண்டு மாதமதில்
அண்ணன் பிரபாவின்
அயராத உழைப்பில் வளர்ந்து
அகிலமே வியக்கும்
அனலொளி மாவீரராகிய புலியே...
காணக்கிடைக்கவில்லை- உன்
கடைசிப் பூமுகத்தை
கண்ணீரால் நாம்- தினமும்
காணிக்கைதான் செய்கின்றோம்.

இந்நாளிலும், இதுவரை காலமும் தமிழர் துயர் நீக்கி துயில் கொள்ளும் மாவீரச் செல்வங்களையும், அநியாயமானமுறையில் கொல்லப்பட்ட அப்பாவித்தமிழ் மக்களையும் நினைவு கூருகின்றோம்.

இவரின் துயரினில்
**குடும்பத்தினர்.**

(3817)

# மக்கள் மனவுணர்வுகளை வெளிப்படுத்துகையில் அதனைப் படையினர் வன்முறையாக்கக் கூடாது

## கண்காணிப்புக் குழுவிடம் சிவாஜிலிங்கம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

பொதுமக்கள் தம் மனவுணர்வுகளை வெளிப்படுத்தும் போது அதனை வன்முறையாக மாற்றிப் பழிதீர்த்துக் கொள்ளும் படைத்தரப்பின் செயற்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும் என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.

திருக்குடும்பக் கன்னியர் மடம் சந்தியில் நடைபெற்ற விபத்தின் பிரதிபலிப்பாக யாழ்ப்பாணத்தில் பரவலாக இடம் பெற்ற எதிர்ப் புக்களைப் பயன்படுத்தி மக்கள் மீது பழிதீர்க்கும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளது தொடர்பாக கண்காணிப்புக் குழுப் பிரதிநிதி லூய்லார்சன் மற்றும் பிரதிநிதிகளிடம் பேசியபோதே அவர் இதனை வலியுறுத்தினார். (33)

## போக்குவரவு சேவைக்கு அனுமதி

நாட்டின் பின்தங்கிய கிராமங்களில் பிரயாணிகள் போக்குவரத்து வசதிகருதி உழவு இயந்திரம் மற்றும் பாரஊர்தி உரிமையாளர்களுக்கு பிரயாணிகள் சேவை நடத்த அனுமதிவழங்கப்படவுள்ளதாகப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. பின்தங்கிய கிராமங்களில் பேருந்துச்சேவை மோசமாக இருப்பதால் பிரயாணிகள் நீண்ட தூரத்தை கால்நடையில் மேற்கொள்வதால் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

இவ்வாகன சொந்தக்காரர்களுக்கு உடனடியாகத் தேவையான அனுமதிப்பத்திரங்களை வழங்கும்படி வாகன போக்குவரத்துப் பதிவாளர்களுக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.

## சேரன் வாணிபம்

## பணிநிலை வேண்டுகை

**பணிநிலை:- ஓட்டுநர்**

**தகைமைகள்: -**

- ✫பாரஊர்தி ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.
- ✫பாரஊர்தி ஓட்டுவதில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் தேவை.
- ✫வன்னி பெருநிலப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- ✫ஆண்டு ஒன்பது (09) வரையில் கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
- ✫வயது 25-40 இற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறித்த தகைமையுடையோர் பின்வரும் ஆவணங்களுடன்

✫தேசிய அடையாள அட்டை
✫குடும்பஅட்டை ✫பிறப்புச்சான்றிதழ்

**08.10.2003 நாள் காலை 10.00 மணிக்கு கண்டிவீதி, கிளிநொச்சியில் அமைந்துள்ள சேரன் வாணிபம் நடுவப்பணிமனையில் நடைபெறும் நேர்முகத்தேர்விற்கு நேரில் வருகைதருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.**

**குறிப்பு:-**

ஊதியத்திட்டம் தொடர்பாக நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

ஆளுகை,
சேரன் வாணிபம்,
நடுவப்பணிமனை,
கிளிநொச்சி.

(சி-8633)

# பதவி வெற்றிடம்

வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கீழ் குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்கள் நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு கீழ் குறிப்பிடும் தகைமையுடைய பணியில் சேர விரும்பும் ஆண்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 'தலைவர், வவுனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நெடுங்கேணி' எனும் முகவரிக்கு 20.10.2003ந் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ, அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். சங்க எல்லைப்பரப்பை உடையவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும். வயதெல்லை 18தொடக்கம் 45 வரை களஞ்சியத் தொழிலாளர்கள் நெடுங்கேணியையோ, நெடுங்கேணிக்கு அண்மையான இடத்தையோ வசிப்பிடமாகக் கொண்டவர்கள் விரும்பத்தக்கது.

| | | |
|---|---|---|
| 01. | பதவி:- | வாகன சாரதி 312/13 |
| | சம்பள அளவுத்திட்டம்: | 165/88-13-31/99ன் படி |
| | | 4000.00 -75X10-80X10 =5550 |
| | | ......................................... |
| | | 48000.00-900X10-960X10 =66600 |
| | தகமை: | ஐந்தாம் வகுப்பு சித்தியும் சகல வாகனங்களும் செலுத்தத்தக்க சாரதி அனுமதிபத்திரம், ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம். |
| 02. | வாகனக்காப்பாளர்:- | 314/16 |
| | சம்பள அளவுத்திட்டம்: | 165/88-16-31/99ன்படி |
| | | 3250.00-60X10-65X10 - 4500.00 |
| | | ......................................... |
| | | 39000-720X10 -780X10-54000.00 |
| | தகமை: | 5ம் ஆண்டு கல்வித்தகமையுடன் நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும். |
| 03. | தொழிலாளி: | 318/16 |
| | சம்பள அளவுத்திட்டம் | 165/88-16 -31/99ன்படி |
| | | 3250.00-60X10-65X10 -4500.00 |
| | | ......................................... |
| | | 39000-00-720X10-780X10-54000.00 |

பொதுமுகாமையாளர்,
வ.வ.ப.நோ.கூ.சங்கம்,
நெடுங்கேணி.

(சி-8287)



**சிந்தனைக்கு**

மக்களின் துன்பங்களிலும் பங்கெடுத்துக் கொள்ளும்போதுதான் மக்கள் எம்மிடம் இணைந்து கொள்வார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 06-10-2003

## ஜே.வி.பி.யின் நாடகம்!

ரணில் அரசு விடுதலைப்புலிகளுடன் தங்கள் நிபந்தனைகளின் கீழ் பேசும் பட்சத்தில் அதைத் தாம் ஆதரிக்கவுள்ளதாக ஜே.வி.பி. வெளியிட்டுள்ள கருத்துக்கள் அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தக் கூடியதே. ஆயினும், அரசியல் சூழ்நிலையில் மாற்றங்கள் எதையும் ஏற்படுத்தக்கூடியதொன்றல்ல. ஏனெனில், ஜே.வி.பி.யின் அறிவிப்பானது அதன் அரசியல் நாடகத்தின் ஒரு பகுதியே ஒழிய அரசியல் யதார்த்தத்திற்கு உட்பட்டதாகிவிட முடியாது.

ஜே.வி.பி.யின் இத்தகைய அறிவிப்பானது, நடைமுறையில் சாத்தியமானால்-சிறிலங்கா அரசியலில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தக்கூடியதொன்றே. அதாவது, ஐ.தே. முன்னணி அரசாங்கம் எதிர்நோக்கும் ஆட்சிக் கவிழ்ப்பு என்ற அச்சுறுத்தலுக்கு இடமில்லாதுபோய்விடும். அதாவது, ஐ.தே.முன்னணி அரசாங்கம் தனது பதவிக் காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் நிரம்பவே இருக்கும்.

மறுவளமாக, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் கவிழ்ப்பு சிந்தனைக்கு இது பெரும் இடையூறு விளைவிப்பதாகவே இருக்கும். ஆட்சிக் கவிழ்ப்பு ஒன்று செய்வதற்கு அதற்குத் தார் மீகப்பலம் ஒன்று இல்லாதுபோவது மட்டுமல்ல, சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு ஆட்சிக் கவிழ்ப்பை மேற்கொண்டால்கூட புதிய அரசாங்கம் அமைத்தல் என்பது சாத்தியமற்றதொன்றாகிவிடும்.

ஆனால், ஜே.வி.பி.யின் இவ்வறிவிப்பினால், நடைமுறையில் மாற்றங்கள் எதுவும் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. ஒருபுறத்தில் ஜே.வி.பி.யின் நிபந்தனைகளை ஏற்று ஐ.தே.முன்னணி அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஏனெனில், சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஜே.வி.பி.யின் நிபந்தனைகள் உகந்த சூழ்நிலையை உருவாக்கக் கூடியதொன்றல்ல.

ஆகையினால், ஐ.தே.முன்னணி அரசாங்கம் ஜே.வி.பியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை. இதன் அர்த்தம் ஜே.வி.பி.யுடன் தனது ஆட்சியைக் காப்பாற்ற ஐ.தே.முன்னணி பேச்சுவார்த்தைகளை நடத்தாதுஎன்பதல்ல அர்த்தம். சமாதானப் பேச்சுவார்த்தைகளை முறியடிக்கக் கூடிய சூழ்நிலை ஒன்றை உருவாக்கும் நிலையில் அது இல்லை என்பதே அர்த்தமாகும்.

இதேவேளை, ஜே.வி.பி.கூட இத்தகையதொரு அறிவிப்பை வெளியிட்டுள்ளமையானது, ஐ.தே.முன்னணி அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்தும் நோக்கிலானது அல்ல. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை குறிப்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சங்கடத்திற்கும், நெருக்கடிக்கும் உள்ளாக்கித் தமது வழிக்குக் கொண்டுவரும் நோக்கிலானதே.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் - ஜே.வி.பி.க்கும் இடையில் கடந்த பல மாதங்களாக நடந்த பேச்சுவார்த்தைகள் முறிவடைந்தமைக்கு சனாதிபதி சந்திரிகாவே காரணம் என்பது ஜே.வி.பி.யின் அபிப்பிராயமாகும். இதற்கு ஏற்றால்போல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அநேகர் ஜே.வி.பி.யுடன் அரசியல் கூட்டணி ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற அபிப்பிராயத்தைக் கொண்டவர்களாகவே உள்ளனர்.

ஆனால், சனாதிபதி சந்திரிகாவின் குழப்பமான முடிவுகள், குதர்க்கமான பேச்சுக்கள் சுதந்திரக் கட்சியினதும், ஜே.வி.பி.யினதும் கூட்டிற்கு முட்டுக்கட்டையாகியுள்ளன. இந்நிலையில்தான், ஜே.வி.பி. சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் எதிர்காலத்தையே அஸ்தமிக்கச் செய்வது போன்றதொரு அரசியல் நிலைப்பாட்டைத் தம்மால் மேற்கொள்ள முடியும் என்பது போல்-ஐ.தே. முன்னணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த ஜே.வி.பி. தயாராக உள்ளது போன்றதொரு சூழ்நிலையை வெளிக்காட்ட முற்பட்டுள்ளது.

ஆனால், இது சனாதிபதி சந்திரிகாவிற்குக் கூட விளங்கிக் கொள்ள முடியாததொன்றல்ல. அதாவது, இன்றைய அரசியல் யதார்த்தமானது ஐ.தே.முன்னணி அரசாங்கத்திற்கும், ஜே.வி.பி.க்கும் இடையிலான பேச்சுவார்த்தை, இணக்கப்பாடு என்பனவற்றிற்கு வாய்ப்பில்லை என்பது அவருக்கும் புரியக்கூடியதொன்றே. அவ்வாறு இல்லாது, ஐ.தே.முன்னணி அரசாங்கம் -- ஜே.வி.பி. பேச்சுவார்த்தை சாத்தியமாகுமானால் அது ஒட்டுமொத்த அரசியல் சூழ்நிலை மாற்றம் - அதாவது, தலைகீழான மாற்றம் - ஒன்று நிகழும் பட்சத்திலேயே சாத்தியமானதாகும்.

ஆகையினால், ஐ.தே.மு. --ஜே.வி.பி. ஒத்துழைப்பு சாத்தியமானதொன்றல்ல. ஆயினும், ஜே.வி.பி.யின் இவ் அறிவிப்பானது, தனது அரசியல் நாடகத்தை எந்த வகையிலும் நடத்த அது தயாராக உள்ளது என்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அது ஜே.வி.பி.யினர் இடது சாரிகளாக - இனவாதிகளாக மட்டுமல்லாது, முதலாளித்துவ வாதிகளாகவும் மாறுவதற்குத் தயாராக உள்ளனர் என்பதையே காட்டுவதாய் உள்ளது. சனாதிபதி சந்திரிகா இவ் யதார்த்தத்தையும் புரிந்து கொள்வாரேயானால் அவர் ஜே.வி.பி.யிடம் இறங்கிச் செல்ல வேண்டியது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

# உலக ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களுக்கு விடுதலைப்புலிகள் மாணவரமைப்பு பாராட்டு

உலக ஆசிரியர் தினமான இன்று விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ஆசிரியர் சமூகத்திற்குற்குப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்துள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

உலகவரலாற்றில் ஈடுஇணையற்ற சேவையாற்றி உயர்ந்த இடத்தைப்பற்றிக் கொண்டவர்கள் ஆசிரியர்கள். மாணவர் சமூகத்தினரால் புனித தெய்வங்களாக மதிக்கப்படும் ஆசிரியர்கள் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. ஆளணிப்பற்றாக குறை, வளப்பற்றாக்குறை நிலவுகின்ற சூழ்நிலையிலும் மக்கள் இடம்பெயர்ந்து மரங்களின் கீழ் வாழ்ந்த காலங்களிலும், மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும், போரியல் சிந்தனையிலும், அர்ப் பணிப்போடு ஈடுபட்ட ஆசிரியர் சமூகத்தை தமிழ் மக்கள் உயர்ந்த இடத்தில் வைத்து மதிக்கின்றனர். சிங்கள அரசு தமிழ் மக்களின் கல்விக்கும் வசதிகளுக் குமான உரிமைகளை மறுத்த போதும் விடாமுயற்சி, அர்ப் பணித்த சேவை மூலம் கல்வி உலகில் தமிழ் மாணவர்களை முன்நிலைப் படுத்திய பெருமை எமது ஆசிரியர்களையே சாரும்.விடுதலைப்போர் உச்ச மடைந்த காலங்களில் களத்தில் வீரவரலாறு படைத்து புதுயுகம் படைத்த ஆசிரியர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம். போரும் கல்வியும் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஒன்றிணைந்தபோது பாடசாலைகளில் கல்விக்காகவும் களமுனைகளில் மண்ணின் விடுதலைக்காகவும் தியாக உணர்வோடு உழைத்த ஆசிரியர்கள் எம்மண் ணிலேயே உருவாகிய வரலாற்றுப் பெருமை எமக்குண்டு.

எனவே அரசாங்கம் தமிழ்மாணவர்களின் கல்விக்கும் , வளங்களிற்குமான சந்தர்ப்பங்களைக் குறைத்த போதெல்லாம் காலமும், நேரமும் பாராது உறுதியுடனும் ,உணர்வுடன் செயற்பட்டு எமது மாணவர் சமூகத்தின் விருத்தியிலும், வளர்ச்சியிலும் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆசிரியர்களை தமிழீழ விடுதலைப் புலிகள்மாணவர் அமைப்பு பாராட்டி கௌரவிக்கும் அதேவேளை, எதிர் காலங்களிலும் அவர்களின் சேவை மாணவர்களைச் சென்றடைய வாழ்த்துகின்றோம் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

# ஐ.நா. அமைதிப்படையில் இணைவது குறித்து சிறிலங்கா இராணுவ தலைமையகம் ஆராய முடிவு

(கொழும்பு)

ஐ.நா.வின் அமைதிப்படையில் சேவையாற்றுவதற்காக சிறிலங்கா இராணுவத்திற்கு அதிக சந்தர்ப்பம் பெறும் நோக்கில் இந்நாட்டில் ஐ.நா. இராணு வப் பயிற்சி முகாம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அத்துடன் மேற்படி அமைதிப் படையில் சிறிலங்கா இராணுவத்தினர் இணைந்து கொள்வதில் ஏற்படும் சிரமங்கள் பிரச்சினை என்பது பற்றியும் ஆராய சிறிலங்கா இராணுவ தலைமையகம் தீர்மானித் துள்ளது.

சிறிலங்கா இராணுவத்தினரைச் சேர்த்துக் கொள்வதில் ஏற்படும் சிக்கல் இவ்வாறான பயிற்சி முகாமை இங்கு அமைப்பதன் மூலம் தீர்க்க முடியும் என ஐ.நா. சபை கருதுகிறது. இதற்கான பாதுகாப்பு கட்டங்களில் சில மாற்றங்களைக் கொண்டுவரவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஐ.நா.வின் இராணுவப் பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ள ஏனைய நாடுகளான, பாகிஸ்தான், அமெரிக்கா,பிரிட்டன் போன்ற நாடுகளின்பங்களிப்புக்களும் அனுபவங்களும் பெறப்படும்.

# பேச்சுக்களை ஆரம்பிக்க சு.க.இன்னும் அழைக்கவில்லை

**விமல் வீரவன்ச தெரிவிப்பு**

(கொழும்பு)

தோல்வி கண்டுள்ள பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு சுதந்திரக்கட்சியிடமிருந்து எமக்கு அழைப்பிதழ் வர வில்லை என ஜே.வி.பி. பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

இதுசம்பந்தமாக கருத்து தெரிவிக்கையில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் தலைவியினால் நியமிக் கப்பட்டுள்ள அதன் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையின் கீழ் குழுஒன்று இப்பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை எவரும் எம்மோடு தொடர்பு கொள்ளவில்லை என அவர் கூறியுள்ளார்.

## தமிழ் மொழி....

02, செல்லப்பா பஞ்சநாதன் வ/தாணிக்குளம் கணேசா வித்தியாலயம் நிலை 03, கா.துணைவன் வ/புதுக்குளம் ம.வி. நிலை - 04, செல்வி சிவப்பிரகாசம் சுந்தராம்பாள் வ/இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி நிலை 05,

*வவுனியா தெற்கு வலயம்.*

ஜயாத்துரை கதிர்காமசேகரன் வ/வவுனியா ம.வி நிலை- 01, திருமதி தர்மலிங்கம் நிறைமதி வ/சைவப்பிரகாச ம.வி நிலை- 02, திருமதி சறோசாதேவி இரவீந்திரன் வ/வவுனியா இந்துக் கல்லூரி நிலை 03, அரசனார் றகமத்துல்லா வ/மதீனாமுஸ்லிம் வித்தியாலயம் நிலை- 04, திருமதி நிரோமி குருஸ் வ/ இரம்பைக்குளம் மகளிர் ம.வி. நிலை- 05

*கிழக்கு மாகாணம்*

திருகோணமலை வலயம்.

செல்வி க.சந்திரகுமாரி தி/ சென்மேரீஸ் கல்லூரி நிலை- 01, திருமதி கம்சத்வதனி குமாரசாமி தி/உவர்மலை விவேகானந்தக் கல்லூரி நிலை- 02, சி. செல்வராசா தி/இ.தி.ச. சிறிகோணேஸ்வரா இந்துக் கல்லூரி நிலை- 03, திருமதி.ஜெ.மதிவதனி தி/பாரதி தமிழ் வித்தியாலயம் நிலை-04, செல்வி முரக சுந்தரி கனகசுந்தரம் தி/ உவர்மலை விவேகானந்தக்கல்லூரி நிலை- 05,

*கந்தளாய் வலயம்*

திருமதி.மர்ஜானி உம்மா முகம்மது ஆசாத் தி.பேராற்றுவெளி ம.வி. நிலை- 01, போ.சுகந்தினி தி.பேராற்றுவெளிபரமேஸ்வரா வித்தியாலயம் நிலை- 02,

*மூதூர் வலயம்*

கி.கணேசலிங்கம் தி/கிளிவெட்டி ம.வி. நிலை-01, எம்.ஐ.றகமத்துல்லா தி/கிண்ணியா அல்.அ.ச.ம.வி. நிலை - 02, எச். எம் கலால்தீன் தி/ அல்மினா ம.வி. நிலை- 03,

*பட்டிருப்பு வலயம்*

திருமதி. ச. விநாயகமூர்த்தி மட்/குருமன்வெளி சிவசத்தி வித்தியாலயம் நிலை- 01, க.பிரபாகரன் மட்/தும்பன் கேணி கண்ணகி வித்தியாலயம் நிலை 02, ச.தட்சணாமூர்த்தி மட்/அபிலாந்துறை கலைமகள் வித்தியா லயம் நிலை -03 சு. மதிமோகன் மட்/முனைத்தீவு ம.வி நிலை -04 திருமதி தே. கந்தசாமி மட்/ பட்டிருப்பு மத்திய ம.வி நிலை -05

*மட்டக்களப்பு வலயம்*

செ.சிவானந்ததேவன் மட்/புதூர் விக்னேஸ்வரா வித்தியாலயம் நிலை -01 வே.தட்சணாமூர்த்தி மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம் நிலை -02 திருமதி ச. அம்பலவாணர் மட்/மீரா பாலகா ம.வி. காத்தான்குடி நிலை -03 ச.மணிசேகரன்/ மஞ்சத்தொடுவாய் பாரதி வித்தியாலயம் நிலை -04 சந்திரசேகரன் மட்/ கிரான்குளம் விநாயகர் வித்தியாலயம் நிலை- 05

*கல்குடா வலயம்*

திருமதி வாணி பகீரதன் மட்/செங்கலடி மத்திய கல்லூரி நிலை -01 எம்.ஐ.கைதர் அலி மட்/காவத்தமுனை அல்அமின் வித்தியாலயம் நிலை -02 எ.ஜெயரஞ்சி மட்/ கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் நிலை -03 திருமதி இன்பமலர் மகாலிங்கம் மட்/வாழைச்சேனை இந்துக் கல்லூரி நிலை - 04 திருமதி பி.பவானந்தலிங்கம் மட்/ வாழைச் சேனை இந்துகல்லூரி நிலை -05

*கல்முனை வலயம்*

அ.குமரநாதன் க.மு. விபுலாந்தர் மத்தியகல்லூரி நிலை - 01 திருமதி சி.நற்குணசிங்கம் க.மு/பெரியநீலாவணை விஸ்ணு ம.வி. நிலை 02 திருமதி மெய்யழகன் க.மு/கார்மேல் பாத்திமா கல்லூரி நிலை -03 க.தவராசா க.மு.//இ.கி. மி நிலை -04 எம்.பஹிருத்தீன் க.மு மஹ்முத் மகளிர் கல்லூரி நிலை -05

*அக்கரைப்பற்று வலயம்*

சின்னத்தம்பி விநாயகமூர்த்தி அக்/நம்பிலுவில் ம.வி. நிலை-01 த.தவராசா அக்/ கோணாவில் விநாயகர் ம.வி நிலை -02 திருமதி ஜெகதீஸ்வரி நாதன் அக்/தம்பிலுவில் ம.வி.நிலை -03 செல்வி மனோரதி அக்/ திருக்கோயில் குமர வித்தியாலயம் நிலை - 04 திருமதி கனகமணி ஜெகநாதன் அக்/ தம்பிலுவில் ம.ம.வி.நிலை -05

*சம்மாந்துறை வலயம்*

திருமதி கௌ. கனகேஸ்வரன் சது/ விபுலானந்த ம.வி நிலை -01 திருமதி ஜெ. சந்திரசேகரம் சது/ வேப்படித் தோட்டம் வாணி வித்தியாலயம் நிலை -02 ஆர். ரெட்ணப்பிரியா/ சது விவேகானந்த ம.வி நிலை -03 பி. யோகராசா சது/ ராணமடு இ.ம.வி.

*ஊவா மாகாணம்*

எம்.இந்திரகுமார் பது/சார்ணிய தமிழ் ம.வி. நிலை -01 செல்வி ஆர். ஜோதிலட்சுமி பது/ சார்ணிய தமிழ் ம.வி. நிலை -02 செல்விகி.சர்மிளா பது/ சரஸ்வதி கனிஸ்ட வித்தியாலயம் நிலை -03 செல்வி எஸ்.சுதர்சினி பது/ ஹாலிஎல தமிழ் ம.வி நிலை- 04 திருமதி தயாண சந்திர குமார் பது/பாரதி வித்தியாலயம் நிலை -05

*பண்டாரவளை வலயம்*

செல்வி கே.தர்சினி பண்/ ஹப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரி நிலை -01

*பசறைவலயம்*

புவனேஸ்வரி பன்னீர்செல்வம் பது/ பசறை தமிழ் ம.வி. நிலை- 01, எஸ். ஜெயலட்சுமி பது/பசறை தமிழ் ம.வி. நிலை- 02,

*வெலிமட வலயம்*

திருமதி ஏ.எஸ். குரைசியா பீபீ ப/ வெலிமட முஸ்லீம் ம.வி. நிலை- 01. ஆர்.டி.எம் றில்வான் ப/ வெலிமட முஸ்லிம் ம.வி நிலை -2

*தெஹியோவிற்ற வலயம்*

திருமதி நிசாறா கே/ தெஹி புனித மரியாள் தமிழ் ம.வி நிலை -01 என். தேவராஜ் கே/தெஹி. தெஹியோவிற்ற தமிழ் ம.வி.நிலை- 02, திருமதி. ஜமுனாமதி கே/ தெஹி-புனித மரியாள் தமிழ் ம.வி. நிலை- 03, எ.பி.எவ். நஸ்லியா கே/ தெஹி.சிறிகதிரேசன் தமிழ் ம.வி. நிலை -04.

## - விபத்தில் பலியானவர்களுக்கான -

# சோககீதம் ஒலிபரப்பிய வேளை ஒலிபெருக்கியை உடைத்த படையினர்

(யாழ்ப்பாணம்)

கடந்த வெள்ளிக்கிழமை மடத்தடியில் இராணுவ வாகனத்தினால் மோதப்பட்டுப் பலியானவர்களுக்காக கோண்டாவில் வடக்கு உரும்பிராய் பகுதிகளில் சோககீதம் இசைக்கப்பட்டுக்கொண்டிருந்த வேளை அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினர் ஒலிபெருக்கிகளையும் வானொலிப் பெட்டிகளையும் மற்றும் கருவிகளையும் அடித்து நொருக்கியுள்ளனர். நேற்று முன் தினம் மாலை மக்கள் தமது சோகத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தவேளை படையினர் மேற்கொண்டமிலேச்சத்தனமான இந்தநடவடிக்கை குறித்து போர் நிறுத்தக் கணகாணிப்புக்குழுவிடம் மக்கள் முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்து இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்ட ஒலிபெருக்கிக் கருவிகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் பார்வையிட்டுள்ளனர். மக்களின் துக்க உணர்வுகளை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளை படையினர் அடாவடித் தனம்மூலம் தடுத்தது அடிப்படை மனித உரிமை மீறல் என்று மக்கள் கண்காணிப்புக்குழுவிடம் சுட்டிக் காட்டியுள்ளனர். (33)

## முல்லை, துணுக்காய் வலய

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் தவறாது சமுகம் தரவும்

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய், கோட்ட பாடசாலைகளைச் சேர்ந்த அனைத்துப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்கு மல்லாவி மத்திய கல்லூரியில் அவசர கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நிரந்தர நியமனக் கோரிக்கைக்கான முதன்மைப் பட்டியல் ஒன்றைத் தயாரிப்பதற்காக தங்களுடைய கல்விச் சான்றிதழ்கள் அவற்றின் பிரதிகள் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரால் தங்களது வேலையை உறுதிப்படுத்திய கடிதத்துடன் தவறாது சமுகம் தருமாறு வடக்கு-கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்க' முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். முல்லை வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான இச்சந்திப்பு ஏற்கனவே இடம்பெற்று முடிந்துவிட்டது என்பதையும் அறியத் தருகின்றார்.

மேலும் முல்லை வலயப் பாடசாலைகளைச் சேர்ந்த ப.நே. ஆ.ஆசிரியர்களுக்கான மற்றுமொரு சந்திப்பு வரும் 9ஆம் திகதி வியாழக் கிழமை காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் இடம்பெறும் எனவும் அறியத் தருகின்றார்.

# கரு ஜெயசூரியவின் தாயாரின் வீட்டின் மீது தாக்குதல்

(கொழும்பு)

கண்டலம, மிரிகமவில் உள்ள அமைச்சர் கரு ஜெயசூரியவின் தயாரின் வீடு நேற்றுக்காலை தாக்குதலுக்கு உள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடு தாக்குதலுக்கு உள்ளான பொழுது அமைச்சரின் தாயாரும், சகோதரன் ஒருவரும் அங்கு இருந்ததாகப் பொலிசார் தெரிவித்தனர்.

எனினும் தாக்குதல் காரணமாக வீட்டில் இருந்தவர்கள் எவரும் காயத்திற்குள்ளாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் மூவரைப் பொலிசார் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர்களினால் பயன்படுத்தப்பட்ட உந்துருளி ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர். (32)

## வாகனச் சாரதி கைது

(யாழ்ப்பாணம்)

மடத்தடியில் விபத்துக்குள்ளான இராணுவ ட்றக் வண்டியின் சாரதி சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக் குள்ளாக்கப்பட்டுள்ளார்.

யாழ்நீதிமன்றின் உத்தரவினையடுத்தே சாரதியான இராணுவச்சிப்பாயை பொலிசார் கைது செய்துள்ளனர். (32)

### கடத்திச்...

இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுமி மயக்கமடைந்த நிலையில் அப்பகுதி மக்களால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (33)

### எரிபொருள்...

தலைவர் தெரிவித்தார். இதன்படி பெற்றோல் இரண்டு ரூபாவாலும், டீசல் ஒரு ரூபாவாலும், மண்ணெண்ணை இரண்டு ரூபாவாலும் விலை குறைக்கப்பட்டுள்ளன. ஏனைய பெற்றோலியப் பொருட்கள் ஒரு ரூபா 20 சதத்தினாலும் விலை குறைக்கப்பட்டுள்ளன. (32)

### கண்காணிப்புக்குழு...

மயகத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து இவ்விசேட குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுவில் இதுவரை காலமும் வவு னியா, மன்னார் பிரதேசங்களில் கடமையாற்றிய நால்வர் அங்கத்துவம் வகிக்கின்றனர். (33)

### மோதலும்...

போராட்டங்கள் நடைபெற்றாலும் இராணுவக் காவலரண்கள் எப்பகுதிகளிலிருந்தும் அகற்றப்படமாட்டாது என அவர் கூறினார்.

யாழ். குடாநாட்டில் இதுவரை 51 இராணுவ வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதனை வைத்துக் கொண்டு 51 காவல் நிலைகளை அகற்று முடியுமா என்றும் இராணுவ அதிகாரி கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் இல்லாதுவிட்டால் நேற்று முன்தினம் போராட்டம் நடத்திய அத்தனை பேரையும் சுட்ட வீழ்த்தியிருப்போம் என்றும் எச்சரிக்கை விடுத்தார்.

# பாலியல் துர்நடத்தை; இரு பெண்கள் கண்டுபிடிப்பு

(வவுனியா)

வவுனியாவில் பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்ட இரு இளம் பெண்கள் பொதுமக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். கடந்த முதலாம் திகதி மேற்படி இரு இளம் பெண்களும் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணையப் போவதாகக் குறிப்பிட்டு கடிதம் எழுதி வீட்டில் வைத்துவிட்டு வெளியேறியுள்ளனர். இதனைப் பார்வையிட்ட பெற்றோர் அவர்கள் இருவரும் 18 வயதிற்கு உட்பட்டவர்கள் எனக்கூறி அவர்களை விடுதலைசெய்யுமாறு இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வவுனியா மாவட்ட அலுவலகத்திலும் விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறையின் செயலகத்திலும் கோரியுள்ளனர். அரசியல்துறையில் இவர்கள் தமது இயக்கத்திற்கு வரவில்லை எனக் கூறியுள்ளனர்.

இதனையடுத்து இவ்விரு இளம் பெண்களும் நேற்று முன்தினம் மறவன் குளத்தில் உள்ள ஒரு வீட்டில் பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது பொது மக்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களை அப்பகுதி மக்கள் வவுனியா மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் ஒப்படைத்தனர். விடுதலைப்புலிகள் இவர்கள் மீது மேற்கொண்ட விசாரணையின் போது தெரியவந்ததாவது இவர்கள் முதலாம் திகதி இரு இளைஞர்களுடன் அனுராதபுரம் சென்று அங்கு பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்ட பின் மீண்டும் இரண்டாம்திகதி வவுனியா வந்துள்ளனர். வவுனியாவில் இருந்து இரண்டாம் திகதி மாலை மூன்று இளைஞர்களுடன் மன்னார்ப் பகுதிக்குச் சென்று பாலியல் துர்நடத்தையில் ஈடு பட்டபின் 3ஆம் திகதி வவுனியா நகரில் விட்டுள்ளனர். மீண்டும் இவர்கள் இருநபர்களால் வவுனியா மறவன் குளம் கிராமத்திற்குக் கொண்டு சென்று அங்கு யாருமில்லாத வீட்டில் பாலியல் துர்நடத்தையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்டனர்.

இவர்களை வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் முன் கடுமையாக எச்சரித்த பின் நேற்று பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர். (10,21)

## போதைப்பொருள் கடத்தல்

# பொலிஸ்மா அதிபருடன் சந்தேகநபர் பிடித்தபடம் மீட்பு

(கொழும்பு)

முல்லேரியா பகுதியில் அன்மையில் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதை பொருள் தொடர்பாக சந்தேகப் படும் நபருடன் தொடர்பு இருந்தாகா சிறிலங்கா பொலிஸ் அதிகாரிகளின் பெயர்களும் வெளியாகியுள்ளன.

இதுதொடர்பில் சிங்கள மற்றும் ஆங்கில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.இந்த போதை பொருள் கைப்பற்றப்பட்டமை தொடர்பாக கோடிஸ்வர வர்த்தகர் ஒருவர் தேடப்பட்டு வருகிறார்.

இந்த நிலையில் இவரின் இல்லத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட புகைப்படங்களில் இவருடன் முன்னாள் காவல்துறை அதிகாரிகளும் பொலிஸ்மா அதிபரும் விருந்து ஒன்றில் பங்கேற்ற புகைப்படமும் மீட்கப்பட்டுள்ளது. எனினும் பொலிஸ்மா அதிபர் வெளிநாடுசென்றிருப்பதால் இதுவிடயத்தில் அவரின் கருத்துகள் எவையும் இதுவரை வெளியாகவில்லை.(32)

# சு.க.நடவடிக்கைக்குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

மக்கள் விடுதலைமுன்னணியுடனான கூட்டுசேர்வதற்கான பேச்சுவார்த்தை முறிவடைந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நடவடிக்கைக்குழு இன்று கூடுகிறது.

சனாதிபதி சந்திரிகா தலைமையில் சனாதிபதி மாளிகையில் இந்தக்கூட்டம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் மக்கள் விடுதலைமுன்னணியுடனான கூட்டுக்கான பேச்சுவார்த்தை முறிவடைந்தமையால் மீண்டும் அதனை ஆரம்பிப்பது சம்பந்தமாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட இருக்கிறது.

அத்துடன் அரசாங்கத்துக்கு எதிராக எதிர் வரும் நவம்பர் மாதம் மேற்க்கொள்ள உத்தேசிக்கப்பட்டிருக்கும் ஆர்ப்பாட்ட பேரணிகுறித்தும் இதில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. (32)

### நெஞ்சம்...

புரிந்து வருகின்ற தொண்டர் ஆசிரியர்களின் பணியை மறக்கக்கூடாது. அதேபோல் சிறிதளவு கொடுப்பனவுடன் கடமைபுரியும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் பணியினையும் மனம்திறந்து பாராட்டுகின்றோம். நடந்து கொண்டிருக்கும் அவர்களது போராட்டம் வெற்றி பெறுவதுடன் அவர்களுக்கு நிலையான பணியமர்த்தம் கிடைக்கவேண்டுமென்பதும் பேரவையின் வேணவாவாகும்.

ஒவ்வொரு பிள்ளையும் கற்க வேண்டும். அந்தப் பிள்ளையை நாட்டுக்கேற்ற நற்குடிகளாக உருவாக்க வேண்டும் என்ற நினைப்புடனும் பொறுப்புடனும் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் பள்ளி முதல்வர்கள், கல்விசார் அலுவலர்கள் அனைவரையும் உலக ஆசிரியர் நாள் கொண்டாடப்படும் இவ்வேளையில் தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையானது வாழ்த்தி பாராட்டி நிற்பதில் பெருமிதம் அடைகிறது.

தமிழீழப் பகுதிகளில் வாழுகின்ற அனைத்துத்தமிழர்களும் இன்றைய நாளில் எமது ஆசிரியர்களை பாராட்டகடமைப்பட்டவர்கள் அந்தந்த வலயங்களில் இதுதொடர்பாக நிகழும் நிகழ்வுகளில் அனைவரும் பங்குகொள்ள வேண்டும் என்றும், ஒத்துழைக்க வேண்டும் என்றும் பேரவை வேண்டிநிற்கிறது. இன்றைய நாளில் ஒவ்வொரு தமிழ் மக்களின் நெஞ்சங்களிலும் எமது எதிர்கால ஏற்றத்தில் ஏணிப்படிகளான இவ்வாசிரியர்களின் பணி போற்றப்பட வேண்டும், பாராட்டப்படவேண்டும். ஆசிரிய உலகத்திற்கு அதுவே நாம் செய்யும் நன்றிக்கடனாகும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பூரண...

முன்னெடுப்பும் நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரியது. ஆனால், பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தம், திம்புப் பேச்சுவார்த்தை, ஜே.ஆர்.ராஜீவ் ஒப்பந்தம் எனப் பல்வேறுபட்ட ஒப்பந்தங்கள் மூலம் காலம் காலமாக தமிழர் ஏமாற்றப்பட்டமை சிறிலங்கா அரசாங்கத்தின் கறைபடிந்த வரலாறுகளில் ஒன்றாகும்.

இந்நிலையில், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் ஒரு பேச்சுவார்த்தையின் அடித்தளம் வெளிநாடுகளில் அமைக்கப்பட்டுள்ளது ஒரு வரப்பிரசாதமாகும். ஆனால், இந்தப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை ஒப்படைப்பது என்ற அத்தியாயம் ஒரு இனிப்பான செய்தியாகும். ஆனால், சிதைந்து போன தமிழர் சமூகம் தழைக்க வேண்டுமெனில் இந்த இடைக்கால சபையில் பூரண அதிகாரங்கள் கொண்ட சபையாக இதை ஏற்று தமிழர் சமூகம் தலைநிமிர வழி சமைப்பீர்கள் என திடசங்கற்பம் கொள்கின்றோம். பின்வரும் விடயங்களை இந்தச் சபை மூலம் எதிர் நோக்குகின்றோம்.

01) காணி: (குடியேற்றம், மீள் குடியேற்றம், சட்டவிரோத குடியேற்றத்தை தடுத்தல்)

02) நிதி: (எமது பிரதேசம் முற்றாக எதிரிகளினால் திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்டதை புனரமைப்பு செய்யவும், வெளிநாடுகளின் நிதி உதவிகளை நேரடியாகப் பெறுதல், உலக வங்கியிடம் கடன் கோருதல்)

03) கல்வி: (அடிக்கடி அரசாங்கம் மாற்றம் அடையும்போது மாறிவரும் கல்விக் கொள்கைகளை தடுத்தல் உலகம் கையுக்குள் எனும் கல்வியை ஊக்குவித்தல் நிலையான கல்வி அத்திவாரத்தை அமைத்தல்)

04) பாதுகாப்பு: (எதிரிகளினால் திட்டமிடப்பட்ட பாதுகாப்பற்ற சட்டத்தைத் தடுத்தல், போதைவஸ்துப் பாவனைகளை நிறுத்துதல் சமூக சீரழிவுகளை சீர் செய்தல் கலாச்சாரத்தை கட்டி வளர்த்தல், பாலியல் பிரச்சாரக் கொள்கைகளைக் கட்டுப்படுத்தல்)

05) நீதி நிர்வாகம்: (எமது தமிழ்க் கலாச்சாரத்துக்கு ஏற்ப சட்டங்களை வகுத்தல், தனி அமர்வு கொண்ட நீதிமன்றுகளை தடுத்தல், எல்லோர்கும் ஓர் சட்டம் எனும் முறையை உருவாக்குதல்)

06) பொருளாதாரம்: (எமது சுயசார்பு பொருளாதாரத்தை கட்டி எழுப்புதல், கடல் வளத்தைப் பாவித்து தொழிற்சாலைகளை அமைத்தல், நிலையான பொருளாதார அத்திவாரத்தை கட்டியெழுப்புதல்)

மேல் வரும் திட்டவரைவுகளை உள்ளடக்கியதும், உள்ளக சுயாட்சியை ஏற்படுத்தக்கூடியதுமான சகல அதிகாரங்களையும் கொண்ட ஒரு இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப்புலிகள் அமைப்பானது ஏற்றுக் கொண்டு ஊழலற்ற எமது மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சுயநிர்ணய ஆட்சியை ஏற்படுத்தக் கூடிய இந்த நிர்வாகத்தை ஏற்க வேண்டுமென்றும் (அதிகாரங்கள் பறிக்கப்பட முடியாததுமானது) எமது மன்றானது கோருகின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

இக்கடிதம் வெளிநாட்டு தூதரகங்கள், உலக வங்கி ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (33)

### பன்னிரு...

மாணிக்கப்பட்ட அரங்கில் வல்வெட்டித்துறை அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி கல்யாணி தலைமையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி சிறப்புரை ஆற்றினார்.

இதேவேளை, வடமராட்சியின் நெல்லியடி மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்த பன்னிரு வேங்கைகளது ஞாபகார்த்த நினைவு கூரல் சுவரொட்டிகள் படையினரால் கிழித்தெறியப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. படையினரால் இச்சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டமை தொடர்பாக வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.தயா கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

எனினும் எந்தவொரு நடவடிக்கையும் கண்காணிப்புக் குழுவால் எடுக்கப்படாதபோதிலும், தீருவில் திறப்பு விழா நிகழ்விற்கு அவர்களும் வருகை தந்திருந்தனர்.

வடமராட்சி கிழக்கில் 12 வேங்கைகள் நினைவு நிகழ்வுகள் பிற்பகல் 3.00 மணிக்கு உடுத்துறை பொதுமண்டபத்தில் கிராம அலுவலர் ப. தவராசா தலைமையில் நடைபெற்றது.

மல்லாவியில் காலை நிகழ்வுகள் 9.00 மணியளவில் மல்லாவி மாவீரர் மண்டபத்தில் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மாலை நிகழ்வு பிற்பகல் 4.00 மணியளவில் திருவுருவப்பட பவனியுடன் ஆரம்பமாகியது. மல்லாவி மாவீரர் மண்டபத்திலிருந்து ஆரம்பமான இப்பவனி யோகபுரம் மகாவித்தியாலயத்தையடைந்ததும் அங்கு நிகழ்வுகள் நடைபெற்றது.

கிளிநொச்சியில் உள்ள சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் மாவீரர் நினைவாலயத்தில் நினைவு நிகழ்வுகள் போராளி குமுதன் தலைமையில் நடைபெற்றன.

கிளிநொச்சிப் பிரதேசத்தில் கிளி. புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று மாலை 12 வேங்கைகள் நினைவு நிகழ்வு வித்தியாலய அதிபர் சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. (27,10,21,24,வோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.